விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை (03.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மோடி-மகிந்த சந்திப்பின் போதான உண்மைகளை மறைக்காதீர்கள்

## இலங்கை அரசுக்கு இந்தியா அறிவிப்பு

(புதுடில்லி)

*ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு பேச்சு வார்த்தைகள் தொடர்பான சகல தகவல்களையும் வெளியிடுமாறு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.*

இந்த பேச்சுவார்த்தை தொடர்பாக இலங்கை அரசாங்கம் வெளியிட்டிருந்த அறிக்கையில், இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்சினை பற்றி இதன்போது பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தச்சட்டம் தொடர்பாக பேசப்பட்ட விடயங்கள் பற்றிய எந்த தகவல்களும் அந்த அறிக்கையில் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் போது பேசப்பட்ட சில விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளதாகவும் உடனடியாக இந்த விடயங்களை வெளியிட வேண்டும்

20ஆம் பக்கம் பார்க்க....

## ஆக்கிரமிப்பு காணிகளை மீட்டு மீள்குடியேற்ற உதவுங்கள்

### முதலமைச்சரிடம் மக்கள் கண்ணீர்



(யாழ்ப்பாணம்)

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது காணிகளை மீட்டு மீள் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்வதோடு பிரதேசத்தை சாராத மதத் திணிப்பை தடுத்து நிறுத்துங்கள் எனவும் முல்லைத்தீவுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சரிடம் அப்பகுதி மக்கள் கைகளைக் கூப்பியபடி கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வட மாகாண முதலமைச்சராகப பதவியேற்றதன் பின்னர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று முதற் தடவையாக விஜயம் செய்தார்.

ஒட்டுசுட்டான், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களில் உள்ள பொதுமக்களின் பிரச்சினைகளை நேரடியாகப் பார்த்து, மக்களைச் சந்தித்து குறைநிறைகளைக் கேட்டறிந்தார்.

ஒட்டுசுட்டான் பகுதியில் பாவட்டி

20ஆம் பக்கம் பார்க்க....

## கத்திக்குத்து; குடும்பஸ்தர் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றிரவு 8.30

20ஆம் பக்கம் பார்க்க....

## மோடி-ஜெயா இன்று சந்திப்பு

(புதுடில்லி)

இன்று செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதா இதன்போது தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஒரு நடவடிக்கையாக கச்சதீவை இந்தியா மீளப்பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவார் எனத் தெரிய வருகின்றது.

தமிழக முதல்வர் இந்தியப் பிர

20ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு கல்வி அபிவிருத்திக்கென ரூபாய் 4 ஆயிரம் மில்லியனை அரசு 4 ஆண்டுகளுக்கு முதலீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கல்வி விருத்திக்கென கடந்த 4 ஆண்டுகளில் 4 ஆயிரம் மில்லியன் ரூபாயினை அரசு முதலீடு செய்துள்ளது என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

மகிந்த சிந்தனை தூர நோக்கிற்கமைய யாழ்.வேலணை மத்திய கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள மகிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான கூடம் நேற்றுக்காலை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் உள்ளிட்டவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

20ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் வேவு விமானம்!

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறப்படும் ஆட்கள் அற்ற சிறியரக வேவு விமானமொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்.நகரிலுள்ள விடுதியொன்றின் மேற்கூரையினிலிருந்து மீட்கப்பட்ட அந்த விமானம் தற்போது யாழ்.பொலிஸார் வசமுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இது எந்த நாட்டினது வேவு விமானமென இதுவரை அடையாளம் காணப்படவில்லை.



எனினும் இது இலங்கை விமானப் படைக்கு சொந்தமானதென்ற தகவல்கள் ஏதும் நேற்று இரவு வரை

20ஆம் பக்கம் பார்க்க....

## 13 பேரது அங்கத்துவத்துடன் சர்வதேச விசாரணைக்குழு

### விரைவில் அறிவிப்பு வெளிவரும்

(கொழும்பு)

இலங்கை மீதான குற்றசாட்டுக்களை விசாரணை செய்யும் ஐக்கிய நாடுகள் சர்வதேச விசாரணைக் குழுவில் 13 பேர் அங்கம் வகிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு அமைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின்ஆணையாளர் நவநதம்பிள்ளை இலங்கை தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நிறுவ உள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்படும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள், மனித உரிமை மீறல்கள மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இந்த விசாரணைக்குழு விசாரணை நடத்த உள்ளது. விசாரணைக்குழுவில் குறைந்தபட்சம் 13 உறுப்பினர்கள் அங்கம் வகிக்க உள்ளதாகவும், இரண்டு அதிகாரிகள மேற்பார்வை செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இரசாயன பகுப்பாய்வு, டிஜிட்டல் ஆதாரங்கள் ஆய்வு போன்றன தொடர்பில் நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளும் விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்க உள்ளனர்.

எதிர்வரும் எட்டு மாத காலப்பகுதியில் குறித்த விசாரணைக் குழுவின் அதிகாரிகள் இலங்கை, வட அமெரிக்கா, ஆசிய பசுபிக் நாடுகள் மற

20ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் இரு இடங்களில் மேற்கொள்ளப்படவிருந்த இராணுவத்தினரின் காணி சுவீகரிப்பு மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழில் இரண்டு இடங்களில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை சுவீகரிக்க இராணுவத்தினர் மேற்கொண்ட சட்ட ரீதியான நடவடிக்கை மக்கள் பிரதிநிதிகளினாலும் காணிகளை இழந்த மக்களினால் வெளிப்படுத்தப்பட்ட கடுமையான எதிர்ப்பினையடுத்து கைவிடப்பட்டுள்ளது.

யாழ்.சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நுணாவில் மத்தி ஜே/307 கிராம சேவையாளர பிரிவில் வசிக்கும் 11 குடும்பத்தை சேர்ந்தவர்களின் காணிகளை 7வது விஜயபாகு காலாட்படை இராணுவ முகாமுக்காக சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட நிலஅளவை செய்யும்



பணிகள் அக் காணி உரிமையாளர்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நிலஅளவை பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து, அங்கு கூடிய காணி உரிமையாளர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். இதனையடுத்து அப்பணிகள்கைவிட்டுநிலஅளவை அதிகாரிகள் திரும்பியுள்ளனர்.

கடந்த 2 ஆயிரம் ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இங்கிருந்து

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்.கடல் எல்லைக்குள் நுழைகின்ற இந்திய மீனவர்களின் கைது தொடரும்

## அமைச்சர் ராஜித ஆணித்தரப் பேச்சு

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா என்ன கூறினாலும் இலங்கை கடல் எல்லைக்குள் புகுந்து மீன்பிடியில் ஈடுபட இந்திய மீனவர்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடரும். எனினும் விசேட விதமாக மீனவர்கள் கைது செய்யப்பட மாட்டார்கள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, பாக்கு நீரிணைக்கு அருகில் மீனபிடியில் ஈடுபட தமிழக மீனவர்களுக்கு வரலாற்று உரிமை இருப்பதாக கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித, பாக்கு நீரிணையில் தமிழகத்தின் பக்கம் இருக்கும் கடலில் மீன்பிடிக்க அவர்களுக்கு உரிமை உள்ளது. ஆனால் இலங்கை பகுதியில் மீன்பிடிக்க அவர்களுக்கு உரிமையில்லை.

உலகில் எந்த நாடும் தமது கடல் எல்லைக்குள் மீறி வந்து மீன்பிடிக்க அனுமதிக்காது. சர்வதேச கடல் எல்லையில் தமது பகுதியில் மாத்திரமே மீன்பிடிக்க முடியும் எனவும் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## அரச வங்கி முகாமையாளர் கைது

(கந்தளாய்)

கந்தளாய் பிரதேசத்தில்அரச வங்கி ஒன்றின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் மகா வித்தியாலயத்தில் பயிலும் 12 வயதான மாணவனை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இந்த வங்கி முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்ட இந்த சந்தேக நபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தந்தையின் வங்கி கணக்கு தொடர்பாக வங்கியில் விபரங்களை கேட்க சென்றிருந்த போது, முகாமையாளர் சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும், தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7552)



220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION MMBL Money Master

- அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்
- கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை
- அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
- 3 – 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.




இல.271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக)
தொ.பே.: 021 222 7835

கிளைகள்:

7 நாட்களும் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

(சி-7554)


# மரண அறிவித்தல்



## திருமதி வசந்தகுமார் இந்திராவதி (கலா)

கேணியடி குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தகுமார் இந்திராவதி (கலா) 02.06.2014 திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா (ஆழிஎல வர்த்தகர்) மற்றும் சிதம்பரம் (நல்லபிள்ளை) தம்பதியினரது பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நயினாதீவைச் சேர்ந்த பரமலிங்கம் இராசரத்தினம் தம்பதியினரது பாசமிகு மருமகளும், பரமலிங்கம் வசந்தகுமாரின் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தரும், நல்லூர் பிரதேசசபை தவிசாளரும்) பாசமிகு மனைவியும், வஜிந் (உயிரியல் ஆசிரியர், விஸ்வமடு மகா வித்தியாலயம்), நிருஷா (கனடா), வசந்துசா (ஆசிரியர், பற்றிமா றோ.க.த.க.பாடசாலை, உருத்திரபுரம்), வனோசன், வவீசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயபிரகாஷின் (கனடா) பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவரான கனகசபை மற்றும் பரமேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரி, காலஞ்சென்றவரான கமலாதேவி மற்றும் அருணகிரிநாதன் (பிரான்ஸ்), கிருஸ்ணவேணி, பரமகுருநாதன், சரோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
ப.வசந்தகுமார் (கணவர்)
நல்லூர் பிரதேசசபை தவிசாளரும்
ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தரும்

இராமகிருஸ்ண பாடசாலை ஒழுங்கை,
கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (6557)

# தமிழ்த்தினப் போட்டியில் சிங்கள மொழியில் தேசிய கீதம்

## அழுத்தத்தின் பேரில் இசைக்கப்பட்டது

கிழக்கு மாகாணத்திற்குரிய மாகாண மட்டத் தமிழ்த்தினப் போட்டி பட்டிருப்பு கல்வி வலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம்மின் அழுத்தத்தின் பேரில சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தினப் போட்டி வரலாற்றில் ஒரு போதும் நடக்காத இந்நிகழ்வை விரும்பாத நடுவனம் வகிக்க வந்த நடுவனர்கள் வெளிநடப்பு செய்தமையால் சில போட்டிகள் ஆரம்பிப்பதற்கு கால தாமதம்மானதாக போட்டிக்கு வருகை தந்தவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், போட்டிக்கு தயாராக ஒப்பனை செய்த வண்ணம் மாணவர்கள் இருந்ததாகவும் அன்றைய தினம் போட்டி பி.ப. 3 மணிக்கே ஆரம்பமானதாகவும் தெரிவித்தனர்.

மாகாண கல்விப் பணிப்பாளரிடம் பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர், இது பட்டிருப்பு தொகுதி; தமிழ் தொகுதி ஆகவே தேசிய கீதத்தினை தமிழ் மொழியில் இரண்டாவதாக வேனும் இசைக்கப்பட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையினை மாகாண கல்விப் பணிப்பாளர் முற்றுமுழுதாக மறுத்ததாகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஒரு சிலருக்கு பதிலளித்தமையை அறியமுடிகின்றது.

இந்தச் செயற்பாடானது, கிழ்க்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தனது பதவியினை தக்கவைத்துக் கொள்வதற்காக ஆளுநரை திருப்திப்படுத்த மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

# றுகுணு பல்கலைக்குள் புகுந்து குண்டர்கள் தாக்குதல் முயற்சி

(கண்டி)

ருகுணு பல்கலைக்கழகத்திற்குள் பொல்லுகள், கம்பிகளுடன் நுழைந்த குண்டர்கள் சுமார் 200 பேர், மாணவர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளனர்.

இதனால் பல்கலைக்கழகத்தில் நேற்று மதியம் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சனத் ஜயசூரியவின் ஆதரவாளர்கள், பல்கலைக் கழகத்திற்கு எதிரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கும் போது, வெளியில் வந்த பல்கலைக்கழக மாணவர்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியுள்ளனர். ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மத்தியில் சனத் ஜயசூரிய உரையாற்றியிருந்தார்.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை பல்கலைக்கழகத்தில் நடத்த மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், அரசாங்கம் அதனை கைவிட்டது.

இந்த நிலையில், நேற்று மாணவர்கள் மீது தாக்குதல் நடத்த சென்ற குழுவினர் இந்த காரணத்தை கூறியே மாணவர்களை தாக்க முயற்சித்துள்ளனர்.

எவ்வாறாயினும், மாத்தறை பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று தாக்குதல் நடத்த சென்றவர்களை அங்கிருந்த வெளியேற்றியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த மூன்று மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது பல்கலைக்கழக வளாகத்தில் அமைதி நிலவுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

# என்மீது சேறுபூசும் ரணில் என்னிடமே உதவியும் கேட்கிறார்

## கூறுகிறார் மகிந்த

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தற்போது தனக்கு எதிராக சேறுபூசி வருவதாகவும் எவ்வித வெட்கமும் இன்றி, தன்னிடம் இரண்டு பாதுகாப்பு ஜீப் வண்டிகளையும் 10 இளம் பொலிஸாரையும் கேட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் இளைய சகோதரர் சாலிய திஸாநாயக்கவிற்கு அஞ்சலி செலுத்த சென்றிருந்த போது அங்கு கூடியிருந்த அமைச்சர்களிடம் ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

உண்மையில் ரணிலுக்கு வெட்கமில்லை. என்ன்ன விமர்சித்து கொண்டே, என்னிடம் இரண்டு வாகனங்களை கோரினார். 10 அமைச்சரவை பாதுகாவலர்களை கேட்டார்.

திருமணம் முடிக்காத 10 இளைஞர்களை ரணிலுக்கு அனுப்பி வைக்குமாறு நான் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவுக்கு அறிவித்தேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மரண வீட்டுக்கு வந்திருப்பதையும் மறந்து விட்டு ஜனாதிபதி சிரித்து பேசியதாக கூறப்படுகிறது.

எது எப்படி இருந்த போதிலும் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு பாதுகாப்பு வாகனங்கள் பயன்படுத்த முடியாதளவில் பழுதடைந்துள்ளன. இதன் காரணமாகவே அவர் புதிய வாகனங்களை கோரியுள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் எதிர்க்கட்சித் தலைவரின் சுற்றுப் பயணங்கள் அதிகரிக்கும் என்பதால், மேலதிகமாக 10 அமைச்சரவை பாதுகாப்பு அதிகாரிகளை கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவருடன் தான் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாக காண்பிப்பதற்காகவே ஜனாதிபதி பகிரங்கமான இடத்தில் வைத்து இவ்வாறு கூறியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் குறிப்பிட்டுள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் கைது தொடர்ந்தால் இலங்கைக்கு பதிலடி கொடுப்போம்

## பா.ஜ.க.எச்சரிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்தால், இலங்கைக்கு பதிலடி கொடுக்க இந்திய மத்திய அரசு தயங்காது என்று பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்த பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் எச்.ராஜா கூறியதாவது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. எதையும் பேச்சுவார்த்தை மூலமும் நல்லுணர்வு மூலமும் தீர்க்க வேண்டும் என்று கருதித்தான் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டு அவருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அதற்குள் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இதே நிலை நீடித்தால் இலங்கைக்கு புரியும் மொழியில் பதிலடி கொடுக்க மத்திய அரசு தயங்காது.

தற்போது மீன்பிடித் தடைக் காலம் முடிந்துள்ள நிலையில், மீன் பிடிப்பதற்காக சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளது கண்டனத் துக்குரியது.

மேலும் இந்த நிலை தொடர்ந்தால் தக்க பதிலடி கொடுக்க மத்திய அரசு தயங்காது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரதமர் நரேந்திர மோடிக்கு மாநில அரசுகளைப் பழி வாங்கும் எண்ணம் கிடையாது. அதற்கு அவர் பிரதமரானவுடன் மாநில அரசுகளின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அறிவித்துள்ளதை உதாரணமாகக் கொள்ளலாம்.

இந் நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமரை சந்தித்து தமிழகத்தின் தேவைகளுக்காக கூடுதல் நிதியைக் கேட்டால் அதை பிரதமர் மோடி நிச்சயமாக நிறைவேற்றுவார்.

இந்தியாவில் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பாஜ.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளது. இனி மத்தியில் கூட்டணி ஆட்சி தான் அமையும் என்று கூறி வந்தவர்களுக்கு மக்களவைத் தேர்தல் முடிவு சரியான முடிவைக் கொடுத்திருக்கிறது.

புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற நரேந்திரமோடி, அமைச்சர்கள் குழுவை கலைத்திருப்பது வரவேற்கத்தக்கது. இதன் மூலம், அமைச்சர்கள் தங்களது துறை தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் அவரவர்களே பொறுப்பேற்க கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழக அரசு பிஷப் கால்டுவெல்லின் 200ஆவது ஆண்டு விழாவை நடத்துவது என எடுத்த முடிவு துரதிர்ஷ்டவசமானது. இது தமிழக மக்களின் மனதை புண்படுத்தும் செயலாகவே நாங்கள் கருதுகிறோம். ஏனெனில் தமிழகத்தில் இன பேதத்தையும் இனவெறியையும் கால் ஊன்ற செய்தவர் தான் இந்த கால்டுவெல் என்பதை அனைவரும் உணர வேண்டும் என்று கூறினார். (2)

## தமிழக மீனவர்கள் 29 பேருக்கும் விளக்கமறியல்

இந்திய மீனவர்கள் 29 பேரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 33 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இவர்களில் 29 பேரைக் கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தனர்.

இவர்கள் 29 பேரையும் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றில் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் முற்படுத்தியபோது அனைவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (2)

## தொழிற்கல்வி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஊடாக தொழிற் கல்வி நெறிகளுக்கு மேற்படி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் சி.சிவசிறி அறிவித்துள்ளார்.

இற்கமைய அலுமினியம் பொருத்துதல், ரேடியோ திருத்துதல், தொலைக்காட்சி பழுது பார்த்தல் போன்ற பயிற்சிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாதம் இறுதிக்குள் கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-60)

## மஹோற்சவம்

ஏழாலை அத்தியடி அருள்மிகு விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக் கிழமை நண் பகல் 12 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

மேலும் உற்சவ காலங்களில் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் திருவிழாக்கள் இடம்பெறும். (2)

# இந்தியாவின் புதிய தலைமை குறித்து இலங்கை அரசு குழப்பமடையாது

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியாவின் புதிய தலைமை தொடர்பில் பல்வேறு தரப்புக்களும் விமர்சகர்களும் என்னதான் கூறினாலும் அது தொடர்பில் இலங்கை அரசாங்கமோ இலங்கை அரசியல் தளமோ எந்த வகையிலும் குழப்பம் அடையவேண்டியதில்லை என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய அரசாங்கம் இலங்கையில் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கும் என்பது தொடர்பில் வெளிவரும் தகவல்கள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இந்த விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை சிதறடிக்க பல தரப்புக்கள் முயற்சிக்கின்றன என்பது எங்களுக்கு தெரியும். அவற்றை தெரிந்து கொண்டே நாங்கள் எமது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் புதிய பரிணாமம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படுகின்ற நெருக்கமான நட்புறவை சீர் குலைப்பதற்கு பல சக்திகள் முயற்சிக்கின்றன.

ஆனால் அந்த விமர்சனங்கள் எல்லாவற்றையும் தாண்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் சிறந்த நட்புறவு உருவாகியுள்ளது.

மோடியின் பதவியேற்பு விழாவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி அவருடன் சுமுகமான கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.

இந்நிலையில் இந்தியாவின் புதிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு ஆபத்து என்றும் அவர் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிப்பார் என்றும் சில தரப்புக்கள் கூறிவருகின்றன.

ஆனால் இந்தியாவின் புதிய தலைமை தொடர்பில் பல்வேறு தரப்புக்களும் விமர்சகர்களும் என்ன தான் கூறினாலும் அது தொடர்பில் இலங்கை அரசாங்கமோ இலங்கை அரசியல் தளமோ எந்தவகையிலும் குழப்பம் அடையவேண்டியதில்லை.

அதாவது இந்த விவகாரம் தொடர்பில் சில தரப்புக்கள் மேற்கொள்கின்ற பிரசாரங்கள் தொடர்பில் அரசாங்கமோ இலங்கை அரசியல் தளமோ குழப்பமடையவேண்டியதில்லை.

அத்துடன் கடந்த காலங்களில் இதே தரப்புக்கள் இந்தியா குறித்து பல விடயங்கள் அவ்வாறே நடக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் என்றார்கள். ஆனால் இந்தியா அவ்வாறு செய்யவில்லை.

எனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் தரப்புக்களின் கூற்றுக்களை விடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வளர்த்தெடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

மேலும் மோடி அயல் நாடுகளுடனான உறவு விடயத்தில் சிறந்த அணுகுமுறையை கையாள்கின்றார்.

எனவே இந்தியாவுடனான நட்பு மேலும் வலுவடையும் சாத்தியமே காணப்படுகின்றது என்றார். (2)

# இராசி பலன்

03.06.2014

(வைகாசி 20, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு

பஞ்சமி காலை 7.29 மணிவரை

ஆயிலியம் முழுவதும்

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை

சஷ்டி விரதம்

வளவன்

**மேடம்:** வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**இடபம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** விடாமுயற்சிக்கு இன்று பரிசு கிடைக்கும், முத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டுவர், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசிமுடித்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை கடைப் பிடிக்க வேண்டிய நாள், பிள்ளைகளால் சிறு வருமானங்கள் ஏற்படலாம், நண்பர்கள் நல்ல யோசனைகளைச் சொல்ல முன்வரலாம்.

**கன்னி:** வேலைச் சுமைகூடும், காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மங்கள ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு, அதிக பிரயாசையால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள்.

**மகரம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், அதிகாரிகளை விமர்சிப்பதனை தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, போசன சுகமுண்டு.

**கும்பம்:** மறக்கமுடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், கொடுத்த வங்கை கடைசிநேரத்தில் காப்பாற்றுவீர்கள், குடும்பத்தில் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, போசன சுகமுண்டு.

**மீனம்:** ஆரோக்கியமான நாள், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் குறையும், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்தேவி விரைவில் சாவகச்சேரிக்கு வரும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியிலிருந்து பளை வரை தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ள வடக்கிற்கான புகையிரத சேவைகள் இம்மாத இறுதிக்குள் சாவகச்சேரி வரை இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான புகையிரதச் சேவைகளை விஸ்தரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், நாவற்குழி பாலத்தை புனரமைக்கும் பணிகள் காரணமாக புகையிரத சேவை தாமதமடைந்திருந்ததாகவும் விரைவில் பணிகள் பூர்த்தியடைந்ததும் யாழிற்கான புகையிரதச் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளாகவும் புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் ஜி.ஏ.பி.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.




நாவற்குழி பாலத்தை புனரமைக்கும் பணிகள் தற்போது பூர்த்தியடையாமல் உள்ளதால் சாவகச்சேரி வரை புகையிரத சேவைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த வருட இறுதிக்குள் யாழ்.வரை புகையிரத சேவைகள் இடம்பெறுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)




நன்றி:-ஐலண்ட்


# தேசிய விதண்டாவாதம் பேசுவது தமிழர்களுக்கு தீர்வைத் தராது

## ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நாம் செய்துவரும் அபிவிருத்திகளை தமிழ்த் தேசியம் பேசி அரசியல் பலம் பெற்றுள்ளவர்கள் ஏன் செய்யாதுள்ளனர் என்ற தெளிவு உங்களுக்கு வரவேணடும்.

பிரச்சினைகளைத் தூக்கிப் பிடித்து குழப்பத்தை ஏற்படுத்தும் அரசியல் நகர்வு மீண்டும் ஒரு அழிவைத் தான் எம்மக்களுக்கு



ஏற்படுத்தும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வாழ்வாதாரம் குறைந்த மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக அப் பகுதியில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தருடனான சந்திப்பொன்று நல்லூர்ப் பகுதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற போதே அவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கான எத்தனையோ தீர்வுகள் கிடைத்த போதும் அத்தனையையும் சுயநலப் போக்கால் தவற விட்டுவிட்டனர். உலக நாடுகள் எந்த தீர்வை முன்வைத்தாலும் இலங்கை அரசுடன் பேசித்தான் நாம் தீர்வைப் பெறவேண்டும் என்பதுதான் நியம்.

தமிழ்த் தேசிய விதண்டாவாதம் பேசுவது தான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் சந்தர்ப்பங்கள் எல்லாம் கலைந்து போனதுக்கு காரணமாகின.

தேர்தல் காலத்தில் மட்டும் உங்களிடம் வருபவர்கள் நாமல்லர். நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களை விட்டுச் சென்றதில்லை. ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் எதிர்கால செயற்பாடு யாவும் இனி வரும்காலத்தில் அடிமட்டக் கிராமங்களினூடாகவே செயற்படவுள்ளது. மக்கள் மயப்படுத்தப்பட்ட கட்சியாக எமது கட்சியை மாற்றி அபிவிருத்தியூடான அரசியல்த் தீர்வை நோக்கியதாகவே பயணிக்கவுள்ளது.

எனவே, தொடர்ந்தும் எங்களை ஏமாற்றாது வருங்காலத்தில் எங்களை உங்கள் ஏகப்பிரதிநிதிகளாக பேரம்பேசக்கூடிய அரசியல் பலத்தை தாருங்கள் என்றார். (அ)

# பயிற்சிப் பட்டறைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். இராகஸ்வரம் இசை மன்றத்தின் ஏற்பாட்டில் வளர்ந்து வரும் பாடகர் மற்றும் பாடகிகளுக்கான குரல், சுருதி, தாளம் என்பவற்றுடன் கவிதை எழுத்தாக்கப் பயிற்சிப் பட்டறை விரைவில் நடைபெறவுள்ளதாகவும் மேலும் இப்பயிற்சிப் பட்டறை இலவசமாகவே நடைபெறவுள்ளதாகவும் மேற்படி இசைமன்றத்தின் இயக்குநர் யெஸ்ரின் விமெல் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்களை இதற்கு விண்ணப்பித்து பயிற்சிப் பட்டறையில் இணைந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்கு வயது வேறுபாடின்றி விண்ணப்பிக்க முடியும். எனவே விண்ணப்பங்களை யாழ். இராகஸ்வரம் இசை மன்றம், இல. 28/1, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை எனும் முகவரிக்கு இன்று செவ்வாய்க்கிழமை முதல் அனுப்பி வைக்க முடியும் என அவர் அறிவித்துள்ளார். (2-51)

# பூம்புகார் கிழக்கு வீதியை புனரமைத்து தாருங்கள்

(கொழும்புத்துறை)

அரியாலை கிழக்கு 9 பூம்புகார் வீதி நீண்டகாலமாக சேதமடைந்துள்ளது என அப்பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி மழை காலங்களில் வெள்ளம் ஓட முடியாதவாறு குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் குறித்த வீதியூடாக பயணிக்க முடியாத நிலைகாணப் பாடுகின்றது.

கடந்த கால யுத்தத்தின் பின்னர் குறித்த பிரதேசத்தில் மக்கள் மீள் குடியேறியுள்ளனர்.

ஆயினும்இதுவரை காலமும் மேற்படி வீதி திருத்தப்படாது மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. மேற்படி வீதி சீரின்மை தொடர்பில் அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

ஆயினும் இதுவரை காலமும் இவ் வீதி புனரமைக்கப்படவில்லை.

எனவே, சீரான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் குறித்த வீதியை திருத்தித் தருமாறு வீதி அதிகார சபையிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-51)

# ஆக்கத்திறன் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்புத்துறை)

யாழ். தமிழ் முற்றம் சஞ்சிகை மற்றும் விண்லாண்ட் புத்தகசாலையின் ஏற்பாட்டில் இவ்வருடமும் கலைத்துறையில் ஆர்வமுள்ளவருக்கான ஆக்கத்திறன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கமைய சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம் போன்ற ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

இதற்காக விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை அனுப்ப முடியும்.

ஒவ்வொரு ஆக்கங்களும் புத்தகமாக கோரப்படுவதுடன் அப்புத்தகங்கள் மூன்று பிரதிகளாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

எனவே, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தமிழ் நூல் விருது 2014, இல. 235, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதில் சிறந்த ஆக்கத்திற்கு தமிழ் நூல் விருதும் பணப் பரிசில்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும். (2-51)

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் வைகாசி மாத வெளியீடு வெளிவந்துள்ளது.

இதில் கா.கைலாசநாதக் குருக்கள் எழுதிய சைவத் திருக்கோயிற் கிரியை நெறி, கிருபானந்த வாரியார் எழுதிய கந்தரநுபூதி, ஸ்ரீ ரமண நினைவலைகள், திருவருட் பயனுக்கான பொருளுரையும் தெளிவுரையும் ஆகியவற்றுடன் சைவ வினா-விடை படத் தொகுப்புகள் என பல விடயங்களைத் தாங்கி இம்மலர் வெளிவந்துள்ளது. (2)





மஹிந்த சிந்தனை தூர நோக்கிற்கமைய யாழ். வேலணை மத்திய கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான கூடம் நேற்றுக்காலை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் உள்ளிட்டவர்களினால் திறந்து வைக்கப்படுவதையும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களையும் வேலணை மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடத்திற்கான நினைவுக்கல்லை ஆளுநர் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன், என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மதுரா அழகுக் கலைப் பயிற்சி நிலையம்

(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
பயிற்சியில் இணைய விரும்புவோர் 05.06.2014 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

பயிற்சி விபரம்:
கிளினப், பேசியல் 25, மேக்கப் 6, சாறி றெசிங் 10 , திரெட்டிங், வக்சிங், பெடிகியூர், மெனிகியூர், நெயில் ஆட், ரீபொண்டிங், ஸ்ரெயிட்டிங், பேர்மிங், கெயார் கட்டிங், மெசினரிபேசியல் 2, வண்டே அயனிங், பின்பிள் ரீட்மெண்ட், கொட் ஒயில் மசாஜ், கரும்புள்ளி வெண்புள்ளி அகற்றுதல், காய்கள் அகற்றுதல், கேளிங், மெகந்தி டிசைனிங், ஸ்பாரிட்மெண்ட்

தையல், சாறிவேர்க், கேக் ஐசிங், கான் வேர்க் ஆகிய பயிற்சிகளும் உள்ளன.

Diploma பயிற்சிக் காலம் 3 மாதம்
பயிற்சிக் கட்டணம் 8000/- மட்டுமே
ProfessionalCourse- 20000/-

மகளிர் மட்டும்

பயிற்சி முடிவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 936 2642
பழைய வீதி, கோப்பாய்.


# அனானுக்கு அல்ல மூனுக்கும் அரசு விசா வழங்கக்கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கர்ஜிப்பு

**(கொழும்பு) இலங்கைக்கு வந்து யுத்தகுற்ற விசாரணை நடத்துவதற்கு கோபி அனானுக்கு அல்ல பான் கீ மூனுக்கு விசா வழங்கக் கூடாது. இதனை கடுமையாக எதிர்ப்பதாக தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு 13 ஐ வழங்கினால் அதுவே அரசின் வீழ்ச்சிக்கு வித்திடும் என்றும் அவ்வியக்கம் தெரிவித்தது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில், சர்வதேச விசாரணைக்கு இலங்கைக்குள் இடமளிக்க மாட டோம். அவ்வாறான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் மாட்டோம் என்றும் அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது.

இத் தீர்மானத்தை மீறி கோபி அனானுக்கு இலங்கைக்கு வருவதற்கான விசாவை அரசாங்கம் வழங்க முயற்சித்தால் மக்களை வீதியில் இறக்கி போராடுவோம். உயிர்த்தியாகம் செய்தாவது தடுத்து நிறுத்துவோம்.

கோபி அனான் அல்ல பான் கீ மூனுக்கும் இங்கு வந்து விசாரணைகளை நடத்த இடமளிக்க மாட்டோம். ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனானை இலங்கை தொடர்பில் விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்டிருப்பதன் பின்னணியிலும் சதியுள்ளது. இவ்வாறானதொரு உயர் பதவி வகித்த வரை நியமித்தால் இங்கு வருவதற்கான விசாவை அரசாங்கம் வழங்கும் என்ற நோக்கமே இதன் பின்னணியிலுள்ளது.

அத்தோடு கோபி அனான் இலங்கைக்கு எதிராகவே செயற்படுவார். அவர் ஐ.நா. செயலாளர் நாயகமாக பதவி வகித்த போதும் அமெரிக்காவின் கைப்பொம்மையாகவே செயற்பட்டார்.

இன்றும் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுப்பார். பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13 ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்களை வடக்கு தமிழர்களுக்கு அரசு வழங்கப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

எந்த வடிவத்திலும் தமிழர்களுக்கு 13 ஐ வழங்குவதை நாம் எதிர்க்கின்றோம். இதற்கெதிராக தேசிய சக்திகள் போராட்டம் நடத்தும். இதனை எப்படிக் கொடுத்தாலும் அது பிரிவினைவாதத்தை நோக்கியே பயணிக்கும்.

எதிர்ப்பையும் மீறி இதனை வழங்கினால் அதுவே அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வித்திடுவதாக அமையுமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (2)


## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர் எஸ். எஸ். சர்மா (குருஜி) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி.

(6554) T.P.0777064247



## விற்பனைக்கு

**குளப்பிட்டி சம்பியன் லேன் 2 பரப்பு சதுரகாணி வீடு, தனி கிணறு, மா, பலா, கமுகு, தென்னை உடன் காணி விற் பனைக்கு உண்டு**

தொடர்பு:- 077 444 3545

(6553)



யாழ். பல்கலைக்கழக மனைப் பொருளியல் பிரிவு நடத்தும் யாழ்ப்பாணத்தில் முதலாவது

## மனைப் பொருளியல் கண்காட்சி

**ஜூன் 4 & 5**

*காலை 10.30- மாலை 4.30 வரையில்*

1. மனை நிர்வாகம் & ஆடை நிர்மாணம்
2. உணவும் போஷாக்கும்
3. ஆரோக்கிய வாழ்வின் அடிப்படைகள்
4. மனித விருத்தி
5. உணவும் சமையலும் பாதுகாப்பும்

**உள்ளிட்ட**

ஒவ்வொரு வீட்டுக்கும்- ஒவ்வொரு மனிதருக்கும் -ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியமான ஏராளமான விடயங்களின் விசேட காட்சிப்படுத்தல்களுடன்

பழப்பானங்கள்- பாரம்பரிய உணவு வகைகள் பலகாரங்கள் நிறைந்த விசேட உணவுக் கூடங்கள்

நவீன சமையல் உபகரணங்கள், தையல் இயந்திரங்களின் பயன்பாடு தொடர்பான செயன்முறை விளக்கங்கள்

நவீன ஹொட்டேல் மாதிரி காட்சிப்படுத்தலும் செயற்பாட்டு விளக்கமும்

பாடசாலைகளில் மனைப் பொருளியல் கற்கும் மாணவர்களுக்கான கல்வி- தொழில் வழிகாட்டல்

பாடசாலை மாணவர்கள்- ஆசிரியர்கள்- இல்லத்தரசிகள்- மற்றும் எல்லோரும் கண்டு களித்து- உண்டு சுவைத்து - பயன்பெற வாருங்கள்.

**பிரவேசம்: இலவசம்**

**இணைப்பாளர், மாணவர்கள்**
**மனைப்பொருளியல் பிரிவு**
**யாழ். பல்கலைக்கழகம்**



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 47 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: B.Com / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/1465 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 8.5 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2069 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை கி.பா: 8<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc/ நில அளவையாளர்<br>தொ.இ: B/1468 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 19.75 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L / அறநெறி ஆசிரியர்<br>தொ.இ: G/2070 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 29. 75சூரி செவ் 5இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Management - Part II / Business<br>தொ.இ: B/1471 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 6 .5 செவ் 2இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L / தையல்<br>தொ.இ: G/2071 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 49 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: B/1473 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 56' செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2072 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 2016 ஆம் ஆண்டளவில் மீன் உற்பத்தி அதிகரிக்கும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மீன் உற்பத்தி 2016 ஆம் ஆண்டளவில் 686 மெற்றிக் தொன்களால் அதிகரிக்கும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இந்து சமுத்திர டூனா ஆணைக் குழுவின் 18 ஆவது சர்வதேச அமர்வு நேற்று முன்தினம் கொழும்பு பண டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இந்த அமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவில் 31 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

அத்தோடு 3 நாடுகள் வாக்களிப்பு அந்தஸ்து அற்ற நாடுகளாக இந்த ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

இந்நாடுகளைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இவ்வமர்வில் பங்கு பற்றியுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் நாளைமறுமதினம் வரை நடைபெறவுள்ள இம்மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கௌரவ விருந்தினராக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸும் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஆரம்ப காலம் முதல் இந்து சமுத்திர மீன் வளத்தை நாம் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி வந்தோம். இருப்பினும் சனத்தொகை அதிகரிப்பு, தொழில் நுட்ப வளர்ச்சி, சந்தைப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கைத்தொழில்மயம் என்பன காரணமாக மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களால் பெருமளவிலான மீன்கள் வீணாக அழிக்கப்படுகின்றன. இதனால் மீன்வளம் பாதிக்கப்படுகின்றது. இது ஆரோக்கியமான நிலைமை அலல.

இலங்கையில் சுமார் 2 ஆயிரத்து 800 பெரிய ஆழ்கடல் வள்ளங்கள் உள்ளன. எமது மக்களுக்குத் தேவையான விலங்குப் புரதத்தில் 70 வீதத்தை மீன்களே வழங்குகின்றன.

நாம் கடற்றொழில் துறை மேம்பாட்டுக்காக மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளின் பயனாகக் கடந்த சில வருடங்களாகத் தனிநபர் மீன் நுகர்வு அதிகரித்துள்ளது. இதன் பயனாகத் தற்போது எமது தனிநபரின் அன்றாட மீன் நுகர்வு 45 கிராம்களாகக் காணப்படுகின்றன.

அதனை உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபாரிசுக்கு அமைய 60 கிராம்கள் வரை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டுள்ளோம். அதனால் எமது மீன் உற்பத்தியை அதிகரிப்பது அவசியம். மேலும் இலங்கையில் பல தசாப்த காலங்கள் நிலவிய பயங்கரவாதம் காரணமாக எமது அபிவிருத்தி பின்னடைவுக்கு உள்ளானதுடன் பல பில்லியன் டொலர்களையும் நாம் இழக்கவும் நேரிட்டது. இப்போது. பயங்கரவாதம் முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டது. அத்தோடு எமது நாடு ஜனாதிபதியின் தலைமையில் மஹிந்த சிந்தனைக்கு ஏற்ப துரித அபிவிருத்திப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார். (2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 280 | 280 | 250 | 250 |
| தக்காளி | 180 | 180 | 170 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 120 | 120 | 100 | 120 |
| கர[illegible] | 140 | 160 | 110 | 160 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 180 | 180 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 120 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 120 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 120 | 130 | 120 | 160 |
| போஞ்சி | 160 | 180 | 170 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-40 | 30 | 30 | 20-30 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 | 100 |

# 33 தமிழக மீனவர்களும் விடுவிக்கப்பட வேண்டும்

## ஜி.கே.வாசன் தெரிவிப்பு

(ஆம்பூர்)

இலங்கை கடற்படையினர் கைது செய்த தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும் என முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

ஜி.கே.வாசன் நேற்று காலை ஆம்பூரில் நடந்த காங்கிரஸ் இல்ல பிரமுகர் திருமணத்தில் பங்கேற்றார். அதன் பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

பா.ஜனதா அரசு பெற்றோல், டீசல் விலை உயர்வை திரும்ப பெற வேண்டும். நரேந்திரமோடி பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி பங்கேற்றது வருத்தமளிக்கிறது.

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் 33 பேரை சிறை பிடித்துள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கூறினார். (2)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 33


டீவ் காண்டாமணி

வலியோடு போராடினால்தான்,
ஒரு பெண் தாயாக முடியும்...
இருளோடு போராடினால்தான்,
புழு வண்ணத்துப்பூச்சியாக முடியும்...
மண்ணோடு போராடினால்தான்,
விதை மரமாக முடியும்...
வாழ்க்கையோடு போராடினால்தான்,
நீ வரலாறு படைக்க முடியும்...

ரவி ரஜீவன்



பிரியன் அகிலன்



ஆசிரியர் : கடல் அரிப்பு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
மாணவன் : சொரிஞ்சு விடனும் ரீச்சர்..

அஜந் குலசிங்கம்



அமெரிக்காவில் தூங்குவதற்கு முன் கணவன் மனைவிக்கு கூறுவது
"good night my love"
இங்கிலாந்தில்
"sleep well my love"
அவுஸ்திரேலியாவில்
"sweet dreams my love"
இலங்கையில்
கேற், கதவு, ஜன்னல்
எல்லாம் பூட்டியாச்சா??

பூரணி ஜெயகோடி

பிச்சை புகினும் கற்கை நன்றே



கரிஸ் கோகுல்

உண்மையான காதலை
இழந்த பின்பும்
அதை மறக்காமல்
நினைத்துக் கொண்டு வாழும்
அனைவருமே
ஒரு உயிர் உள்ள
தாஜ்மஹால் தான்....!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம்

## (School Base Teacher Development) - SBTD

(நேற்றைய தொடர்ச்சி)...

ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அறிவு, திறன், மனப்பாங்குகள் இற்றைப் படுத்தப்பட வேண்டும். ஒன்றிணைப்பு முயற்சிகள் பாடசாலையினுள் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் கல்விச் செயல்முறை வினைத்திறன் அற்றதாக மாறி உற்பத்தி திறன்குறை வடையும். ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் என்பது பின்வரும் விடயப் பரப்புகளை உள்ளடக்கியிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1.புதிய கற்கை நெறிகளுக்கு ஆசிரியர்களை அனுப்புதல்.

2.கோட்பாடுகள் புதிய அறிவினை பெற்று கொள்வது.

3.தேர்ச்சி மட்ட அணுகுமுறையை கற்பித்தலில் பயன்படுத்துவது.

4.பாடசாலைக்குள் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குவது

5.அறிவை, அனுபவங்களை தேடிப் பெறுவதுடன் அதனைப் பகிர்ந்து கொள்வது.

6.புத்தாக்கம், செயல்வழி ஆய்வுகள், படைப்பாக்கம் என்பவற்றில் கவனம் செலுத்துவது

7.தொடர்ச்சியான கற்றலுக்கு வழி காட்டுவதுடன் சக ஆசிரியர்களுக்கும் வழி காட்டல்.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியில் பின்வரும் செயற்பாடுகள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

1.எல்லா ஆசிரியர்களும் முகாமைத்துவ பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளல்.

2.தீர்மானம் எடுத்தலில் தனிநபர்களை இணைத்துக் கொள்ளல்.

3.ஆற்றுகையாளர்களுக்கு உயர் வெகுமதியை வழங்குதல்.

4.ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் சூழலை உருவாக்குதல்.

5.உயர் பங்கு பற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

6.அதிகரித்த மனவுறுதியை வளர்ப்பதற்கு வழிப்படுத்தல்.

7. பாடசாலைக்கு சொந்தமானவர் என்ற மனவுணர்வை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

8. குறித்த பணியை செய்வதற்கு ஆசிரியர்களை தயார்படுத்தல்.

9. தனிநபர் ஆற்றல், தொழில் விருத்தியடைய சந்தர்ப்பங்களை தொடர்ச்சியாக வழங்குதல்.

### பொருத்தமான விடயப் பரப்புக்கள்

1.ஆசிரியர் கூட்டங்கள் - பெற்றோர் கூட்டங்கள் வலுப்படுத்தப்படல்.

2. ஆசிரியர்களின் தேவைக்கேற்ப குழுக்கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல்.

3.மாதிரிக்கற்பித்தல் வகுப்புக்களை ஒழுங்குபடுத்தல்.

4.வெளிப்புற உதவியுடன் ஆசிரியர் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல்.

5.சகபாடிப் பயிற்சிகளுக்கான இடங்களை அமைத்துக் கொடுத்தல்.

6.தொழில் வழிகாட்டுநர் மூலம் வழி காட்டல்.

7. செய்து காட்டல் வகுப்புக்களை திட்டமிட்டு செயற்படுத்துதல்.

8.பாடசாலை மட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள்களை ஏற்பாடு செய்தல்.

9. ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழி காட்டல்களை ஏற்பாடு செய்தல்.

10.செயல்நிலை ஆய்வுகளுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

11.சம்பவக்கற்கை (விடயஆய்வு) தொடர்பாக அனுபவங்களுக்கு வாய்ப்பு வழங்குதல்.

12.கண்காணிப்பு பயிற்சிகள், மாதிரிப் பாடசாலைகள், கல்வி நிறுவனங்களை அவதானித்தல்

13.அனுபவ பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்

14.தொடர்கற்றலுக்கான வாய்ப்புகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல்.

15.பல்வேறு மொழிகளையும் கற்பதற்கான சூழலையும் உருவாக்குதல்.

16.தகவல், தொடர்பாடல் தொழில் நுட்ப அறிவையும் பயிற்சிகளையும் வழங்க பாடசாலை மட்டத்தில் ஏற்பாடுகள் செய்தல் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டுத்திட்ட வேலைத்திட்டத்தை நிறுவனப்படுத்தல்

பின்வரும் பாடமுறைகளை அனுசரித்தல் பொருத்தமானது.

1.பாடசாலைகள் செயற்பாடுகளை மீளாய்வு செய்து ஆசிரியர்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் திட்டங்களை வகுத்தல்.

2.பாடசாலையில் ஆசிரியர் மேம்பாட்டுக் கல்விக் குழுவொன்றை அமைத்தல்.

3.இக்குழு ஆசிரியர்களுக்கான தேவைகளை இனங்காணல்.

4.இனம் காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த பாடசாலை செயற்றிட்டத்தில் (AIP) இணைத்தல்.

5.ஆசிரியர் செயலாற்றுகை தரங்களை செயற்பாட்டினூடாக ஆசிரியர் பயிற்சித் தேவைகளை மதிப்பிடலாம்.

6.ஆசிரியர் செயலாற்றுகை மீளாய்வின் போது பாடங்களுக்கு பொருத்தமான வகையில் விருத்தி செய்ய வேண்டிய திறன்களையும் மற்றும் இல்லாது ஒழிக்க வேண்டிய குறைபாடுகளையும் இனம் காணல்.

7.பாடசாலை வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு போதுமான நிதியை ஒதுக்குதல். வேறு நிதி மூலங்களை பெறுவதற்கு நடிவடிக்கை எடுத்தல்.

8.வேலைத்திட்டங்களில் ஆர்வத்து டன் பங்குபற்ற ஆசிரியர்களை ஊக்குவித்தல்.

9.செலவற்ற வேலைத்திட்டங்களை சேர்த்துக் கொள்ளல்.

10.வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்து மதிப்பீடு செய்தல்.

11.பெறப்பட்ட அனுபவங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளல்.

பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், செயன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெறுதல் வேண்டுமென்ற சிந்தனையானது ஆழ்தளக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாவதாகும். வாண்மை என்பது மிக உன்னதமான சேவையாகும். தொடர்ச்சியான கல்வி, பயிற்சி என்பவற்றின் ஊடாக வாண்மை தகைமையுடன் உயர் ஒழுக்கங்களையும் உள்ளடக்கிய வகையில் சேவைக்காலத்தில் அடையப்படுகின்ற ஒரு வாய்ப்பாகும். அறிவின் அலகுகளையும் அதன் பிரயோகங்களையும் திறனையும் சரியான வழியில் ஏனையோருக்கு புகட்டுதல் ஆசிரியர்களின் தேர்ச்சி என குறிப்பிடப்படுகிறது.

1.அறிவுசார் தேர்ச்சி

2.தலைமைத்துவம் சார் தேர்ச்சி

3.வெறுப்புகள் சார் தேர்ச்சி

4.ஒழுக்கங்கள் சார் தேர்ச்சிஎன்பவை ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் என குறிப்பிடப்படுகிறது.

ஆசிரியர்களின் அறிவாற்றல், தேர்ச்சிகள் என்பவை மேம்படுவதற்கு ஏற்ற வகையில் பாடசாலை முகாமைத்துவம் தனது கவனத்தை செலுத்த வேண்டும். பாடசாலைச் சூழல் கற்கின்ற சமூகத்தை கொண்டிருக்கும் வகையில் உருவாக்கப்படுதல் வேண்டும். பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தி ஆசிரியர்களின் விருத்தி திட்டங்களை உரு வாக்க வேண்டும்.

1.குழுக்கற்பித்தல்.

2.பாடத்திட்டங்களை வேலைத் திட்டமாக மாற்றுதல்.

3.பொருத்தமான வகையில் பாட முன்மொழிவும் பாடக்குறிப்புகளும் தயாரித்தல்.

4.பொருத்தமான கற்பித்தல் துறைகளை உருவாக்குதல்.

5.பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நுட்பங்களை பிரயோகித்தல்.

6.பொருத்தமான மதிப்பீட்டு இலக்குகளை உருவாக்குதல்.


7.பரிகாரச் செயற்பாடுகளுக்கான திறனை விருத்தி செய்தல்.

8.செயற்றிட்டங்களை உருவாக்கு தல், நடைமுறைப்படுத்தல்.

9.வகுப்பறை முகாமைத்துவம், வகுப்பறைக் காலநிலை, மாணவர் ஒழுக்கம் தொடர்பான மேம்பாட்டுக்கு வழி ஏற்படுத்துதல்.


10.அர்ப்பணிப்புடன் கடமையாற்று வதற்குரிய நேர்மனப்பாங்கை வளர்ப்பதற்குரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தல்.

ஆசிரியர்களின் மேம்பாடு, மாணவர்களின் மேம்பாட்டுக்கு வழி வகுக்கும். எரிந்து கொண்டிருக்கும் தீபங்களிலிருந்தே ஏனைய தீபங்களை ஏற்ற முடியும். எரியும் தீபங்களுக்கு எண்ணெய் ஊற்றினால்தான் அவை தொடர்ந்து பிரகாசிக்க முடியும். தொடர்ந்து பிரகாசிப்பதே இன்றைய கல்வித் தேவையாகும்.



பொன்னம்பலம் அருணகிரிநாதன்
SLEAS III
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ். கல்வி வலயம் யாழ்ப்பாணம்

### SBTD தொடர்பான சாத்தியமான படிமுறைகள்




### சாத்தியமான செயற்பாடுகள்

1. சகபாடிகளுடனான பயிற்சி
2. பாடசாலை மட்ட கண்காணிப்பு
3. பாடங்களைச் செய்து காட்டலும் சகபாடிகள் அவதானித்தலும்.

4.கல்விசார் ஒத்துழைப்பும் தனிநபர் ஆலோசனையும்.

5. கற்றல்– கற்பித்தல் கையேடு தயாரித்தலும்/ பயன்படுத்தலும்.

6. கல்விக் குழுக்கள்

7 விடய ஆய்வுக் கலந்துரையாடல்கள் ஏனைய பாடசாலைகளுடனான தொடர்புகள்.

9. தொழில் சார் வலையமைப்புக்களை ஏற்படுத்தல்.

பாடசாலை முகாமைத்துவக் குழு (SMC) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான புதிய பரிமாணங்களைத் தேட வேண்டும். மரபுரீதியான சிந்தனையில் இருந்து விடுபட்டு காலத்திற்குப் பொருத்தமானதும் தேவையடிப்படையானதுமான வழிகளைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் போதுமான நிதி ஏற்பாடுகளையும் SDC மேற்கொள்ள வேண்டும். பாடசாலை சார்ந்த ஆசிரிய மேம்பாடும் பாடசாலை அபிவிருத்தித் திட்டமும் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

(முற்றும்)

# தமிழ்நாட்டுடன் வடக்கை இணைக்க முதலமைச்சர்கள் முயற்சியாம்

## தேசப்பற்றுள்ள தே.இயக்கம் தெரிவிப்பு

தமிழ் நாட்டையும் வடமாகாணத்தையும் இணைக்கும் முயற்சியில் இரு முதல்வர்களும் ஈடுபட்டுள்ளனர்.

சர்வதேசத்தின் முன் அரசாங்கத்தை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தும் கூட்டமைப்பின் செயற்பாட்டை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். தேவைப்படின் நாட்டின் நன்மைக்காக கூட்டமைப்பினரை கைது செய்தாலும் தவறில்லை என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பிலான தீர்விற்கு இந்தியாவின் உதவி அவசியமென கூட்டமைப்பு கோரியுள்ளமை குறித்து தெரிவிக்கையிலேயே தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடமாகாண சபையையும் இந்தியாவின் தமிழ் நாட்டினையும் ஒன்றிணைத்து தனித் தமிழர் அரசாங்கமொன்றினை அமைக்கும் முயற்சியினையே வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனும் இந்திய தமிழ் நாட்டு முதல்வர் ஜெயலலிதாவும் மேற்கொண்டு வருகின்றனர்.

வடமாகாணத்தில் தமிழ் மக்கள் கூட்டமைப்பிற்கு கொடுத்த வெற்றியை போலவே தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் ஜெயலலிதாவிற்கும் வெற்றியை வழங்கியுள்ளனர். மத்திய அரசின் பிடியில் இருந்து தனித்து செயற்பட வேண்டும் என்ற ஒரே கொள்கையே இவ் இருவருக்கும் உள்ளது. எனவே அதற்கு அரசாங்கம் இடமளிக்கக் கூடாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி வடக்கில் மட்டுமே உள்ளது. எனினும் அரசாங்கத்தின் வெற்றி நாடு முழுவதும் உள்ளது. சிங்கள மக்கள் அனைவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மட்டுமே விரும்புகின்றனர். எனவே, நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் வட மாகாண சபையினை அரசாங்கம் உடனடி [illegible] என்றார். (2)

# லக்ஸ்மன் ஹுலுகல்லவுக்கு இராஜதந்திரப்பதவி

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்லவிற்கு இராஜதந்திர பதவியொன்று வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ் தானிகராலயத்தின் அமைச்சு பதவியொன்று ஹுலுகல்லவிற்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

ஹுலுகல்ல, ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கவின் இணைப்புச் செயலாளர், இளைஞர் விவகார அமைச்சின் ஆலோசகர், அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலமாக ஹுலுகல்லவிற்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதுடன், பல்வேறு சர்ச்சைகளும் எழுந்திருந்தன. மேலும் ஹுலுகல்ல, சில தடவைகள் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்திருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் குடும்பத்தாருக்கும், ஹுலுகல்லவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

823

## ஆலைத் தொழிலாளியும் பூனை உலகமும்



ஒருவர் மாவு ஆலை வைத்திருந்தார். அவருக்கு மனைவி, குழந்தைகள் என யாரும் கிடையாது. மூன்று பேர் அவரிடம் வேலை பார்த்து வந்தார்கள்.

இப்படியே பல வருடங்கள் கழிந்தன. ஒருநாள் அவர்கள் எல்லோரையும் அழைத்த முதலாளி, எனக்கு வயதாகிவிட்டது. நான் ஓய்வு பெறவிரும்புகிறேன். இந்த ஆலையை உங்களில் ஒருவருக்குக் கொடுக்க நினைக்கிறேன். யார் இருப்பதிலேயே சிறந்த குதிரையைக் கொண்டு வருகிறார்களோ, அவருக்கு ஆலையைக் கொடுப்பேன் என்றார்.

மூன்று பேரில் ஒருவன் ஹன்ஸ். மற்ற இருவருக்கும் உதவியாக இருப்பவன். அவன் ஆலையை உரிமையாக்கிக் கொள்ளும் அளவுக்குத் தகுதி இல்லாதவன் என்று மற்ற இருவரும் நினைத்தார்கள். ஹன்ஸ் கூட ஆலையைப் பெற விரும்பவில்லை.

ஆனாலும் இருவருடனும் சேர்ந்து சென்றான். அவர்கள் ஒரு கிராமத்தை அடைந்தனர். நீ சாகும்வரை முயற்சித்தாலும் உன்னால் ஒரு சிறந்த குதிரையைக் கொண்டு வர முடியாது என்று மற்ற இருவரும் ஹன்ஸைக் கிண்டல் செய்தார்கள்.

இரவு, ஒரு குகையைக் கண்டடைந்து அங்கே படுத்துக் கொண்டார்கள். ஹன்ஸை எப்படியாவது விட்டுவிட்டுப் போய்விட நினைத்த இருவரும் அவன் தூங்கியவுடன் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

விழிந்ததும் தன் தோழர்கள் இல்லாததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான் ஹன்ஸ். யோசித்தபடியே காட்டுக்குள் நடக்க ஆரம்பித்தான். அப்போது ஒரு குட்டிப் பூனை குறுக்கிட்டது. அதன் உடல் முழுவதும் சின்னச் சின்னப் புள்ளிகள். அந்தப் பூனை ஹன்ஸிடம் நட்பு உணர்வுடன் பேசியது.

எங்கே போகிறாய் ஹன்ஸ்?

எதற்காகக் கேட்கிறாய்? உன்னால் எனக்கு உதவ முடியுமா என்றான் ஹன்ஸ்.

நீ எதைத் தேடிச் செல்கிறாய் என்பது எனக்குத் தெரியும். என்னுடன் வந்து, ஏழு வருடங்களுக்கு விசுவாசமான வேலைக்காரனாக இருந்தால் சிறந்த குதிரையைக் கொடுப்பேன் என்றது பூனை.

அந்தப் பூனை உண்மையைத் தான் சொல்கிறதா என்று பார்க்க நினைத்த ஹன்ஸ் சம்மதித்தான்.

பூனை அவனைத் தன்னுடைய கோட்டைக்கு அழைத்துச் சென்றது. அங்கே எல்லாமே பூனைகள்தான். மாலையில் அவர்கள் சாப்பிட உட்கார்ந்த போது, ஒவ்வொரு பூனையும் ஒவ்வொரு வாத்தியத்தை வாசித்தன. பிறகு அந்தப் பூனை ஹன்ஸிடம், வா, வந்து என்னுடன் ஆடு என்றது.

முடியாது. நான் இதுவரை பூனைகளோடு ஆடியதில்லை என்றான் ஹன்ஸ்.

சரி, இவனைப் படுக்கைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று ஆணையிட்டது பூனை.



ஒரு பூனை விளக்கை ஏற்றிப் படுக்கைக்கு வழி காட்டியது. மற்றொரு பூனை, அவன் படுத்ததும் விளக்கை அணைத்தது.

அடுத்தநாள் காலையில், இதே போல் பூனைகள் அவனுக்கு சேவகம் செய்தன. இப்போது ஹன்ஸ் பூனைக்காக வேலை பார்க்க வேண்டிய நேரம்.

தினமும் விறகு வெட்டி வரவேண்டியது அவனுடைய வேலை. இந்த வேலைக்காக அவனுக்கு வெள்ளிக் கோடாரி, ரம்பம், உளி, தாமிரத்தால் ஆன சுத்தியல் ஆகியவற்றைக் கொடுத்தது பூனை. அவனும் மரத்தை வெட்டி எடுத்து வந்தான். கோட்டையில் ஓய்வெடுக்கும் நேரம் இருந்தது. ஆனால், அந்தக் கோட்டையில் பூனைகளைத் தவிர வேறு யாரும் இல்லை.

ஒருநாள் அவனைக் கூப்பிட்ட பூனை, போய் என் புல்வெளியை அறுத்து, வைக்கோல் தயார்செய் என்றது. வெள்ளியாலான அரிவாள், தங்கத்தாலான கத்தி ஆகியவற்றை அவனிடம் கொடுத்து, வேலை முடிந்ததும் எல்லாவற்றையும் பத்திரமாகத் திரும்பிக் கொடுக்க வேண்டும் என்றது.

ஹன்ஸ் வைக்கோலை அறுத்த பிறகு, பூனை கூறியபடியே எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்தான். இப்போதாவது தன் உழைப்புக்கு ஊதியம் கிடைக்குமா? என்று கேட்டான்.

இல்லை. இங்கே வெள்ளி மரம், கோடரி என உனக்குத் தேவைப்படும் எல்லாமே வெள்ளியில் இருக்கின்றன. எனக்காகச் சிறிய வீடு ஒன்றைக் கட்டித்தர வேண்டும் என்றது.

ஹன்ஸ் வீட்டைக் கட்டினான். முடித்த பிறகு, பூனையிடம் சென்று விடயத்தைச் சொன்னான். ஏழு வருடங்கள் அவன் அங்கே வேலை பார்த்திருந்தாலும் அது, ஆறு மாதத்தைப் போலத்தான் தோன்றியது.

தொடரும்.................




- 1539 - ஸ்பானிய நாடுகாண் பயணி ஹெர்னாண்டோ டெ சோட்டோ புளோரிடாவை ஸ்பெயினுக்காக உரிமை கொண்டாடினான்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் வேர்ஜீனியாவின் ஹனோவர் நகரில் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகளைத் தாக்கினர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் வான் படை பாரிஸ் நகரில் குண்டுகளை வீசின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சின் டன்கேர்க் நகரில் இடம்பெற்ற போடரில் ஜெர்மன் படைகள் வெற்றி பெற்றன. நட்பு அணி நாடுகள் முழுமையாகப் பின்வாங்கின.
- 1965 - நாசாவின் ஜெமினி 4 விண்கலம் ஏவப்பட்டது. எட்வேர்ட் வைட் 21 நிமிடங்கள் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவரே விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கர் ஆவார்.
- 1969 - தெற்கு வியட்நாமில் "மெல்பேர்ன்" என்ற அவுஸ்திரேலியப் போர்க்கப்பல் "எவான்ஸ்" என்ற அமெரிக்கப் போர்க்கப்பலுடன் மோதி அதை இரண்டாகப் பிளந்தது.
- 1984 - அம்ரித்சரில் சீக்கியர்களின் புனிதப் பொற்கோயிலுள் இந்திய இராணுவத்தினர் புகுந்தனர்.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் ஏழு வாரங்களாக இடம்பெற்று வந்த ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க அங்கு சீன இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர்.
- 1991 - ஜப்பானில் உன்சென் மலை வெடித்ததில் 43 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் ஆவர்.
- 2006 - 2001 இல் அகற்றப்பட்ட கண்ணகி சிலையை முதல்வர் மு. கருணாநிதி மீண்டும் திறந்து வைத்தார்.
- 2006 - மொண்டெனேகுரோ நாடு செர்பியா-மொண்டெனேகுரோ கூட்டமைப்பிலிருந்து பிரிந்தது.
- 2007 - கொழும்பில் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2007 - தெற்கு சீனாவில் யுனான் பகுதியில் இடம்பெற்ற 6.4 அளவு நிலநடுக்கத்தில் பலர் கொல்லப்பட்டுப் பலத்த சேதம் ஏற்பட்டது.

பிறப்புகள்

- 1808 - ஜெபர்சன் டேவிஸ், அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் அரசுத் தலைவர் (இ. 1889)
- 1924 - மு.கருணாநிதி, தி.மு.க. தலைவர்
- 1931 - ராவுல் காஸ்ட்ரோ, கியூபாவின் அரசுத் தலைவர்
- 1961 - லோறன்ஸ் லெஸிக், அமெரிக்கக் கல்வியியலாளர்
- 1966 - வசீம் அக்ரம், பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்

இறப்புகள்

- 1657 - வில்லியம் ஹார்வி, ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1578)
- 1963 - பாப்பரசர் 23ஆம் ஜோன் (பி. 1881)
- 1975 - எய்சாக்கு சாட்டோ, ஜப்பானியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1901)
- 1989 - அயதொல்லா கொமெய்னி, ஈரானிய மதத் தலைவர் (பி. 1900)
- 1990 - ராபர்ட் நாய்சு, அமெரிக்கப் பொறியியலாளர் (பி. 1927)
- 2000 - ஜெய்சங்கர், தமிழ் நடிகர்
- 2001 - அந்தனி குயின், ஹொலிவுட் நடிகர் (பி. 1915)
- 2007 - [illegible], தென்னிந்தியத் திரைப்பட நடிகை

### மு. கருணாநிதி



முத்துவேல் கருணாநிதி, நாகப்பட்டிணம் மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகிலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் ஜூன் 3, 1924 இல் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் தட்சிணாமூர்த்தி.

இவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முன்னாள் தமிழக முதல்வரும் ஆவார். 1969இல் முதன்முறையாக தமிழக முதல்வரானார். மே 13, 2006இல் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். கருணாநிதி, தமிழ்த் திரையுலகில் கதை, உரையாடல் பணிகளில் ஈடுபாடு கொண்டவர். "தூக்குமேடை" நாடகத்தின் போது எம்.ஆர்.ராதா "கலைஞர்" என்ற பட்டம் அளித்தார். இன்றும் அப்பெயராலேயே ஆதரவாளர்களால் அழைக்கப்படுகின்றார். 2011 தமிழக தேர்தலில் திருவாரூர் தொகுதியில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**தன ஸ்தானம் வலுக்கிறது! தடைகள் விலகப்போகிறது!** **75/100**

**எப்படிப்பட்ட நெருக்கடி வந்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் பெற்ற மிதுன இராசிநேயர்களே!**

கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் உங்களுக்கு கடந்த ஓராண்டாக இருந்த கவலைகள் மாறப்போகின்றன. இப்பொழுது சஞ்சரிக்கும் குருபகவான் எப்பொழுதும் போலத்தான் பெயர்ச்சியாகிறார் என்று நினைக்க வேண்டாம். கடக இராசியில் உச்சம் பெறுகிறார்.

கடகத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 3 இடங்களில் பதிவாகின்றது. எந்தெந்த ஸ்தானங்களில் குருவின் பார்வை பதிவாகின்றதோ. அந்தந்த ஸ்தானங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. எனவே, கடன்சுமை, உடல்நிலை, செயற்பாடுகள், தொழில்முறை ஆகியவற்றை குறிக்கும் இடங்களெல்லாம் உச்ச குருவின் பார்வையால் உடனடியாகப் புனிதமடைகின்றன. எனவே. அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஆர்ப்பரிக்கவும் தேவையில்லை.

**நன்மைகள் பெருகும் காலம்**

ஜென்ம குரு விலகிவிட்டதால் இனி செலவிற்கு கவலை இல்லை. நன்மைகள் வாயிற்கதவைத் தட்டும். நல்ல காரியங்கள் ஒவ்வொன்றாக இல்லத்தில் நடைபெறும். வைகாசி 30 முதல் உன்னதமான நேரம்தான் உங்களுக்கு.

எல்லோரிடமும் எளிதில் பழகும் சுபாவம் உங்களுக்கு இருப்பதால் ஏராளமான நண்பர்களைப் பெற்றிருப்பீர்கள். பிறருக்கு யோசனை சொல்வதில் பெரிய ஞானிகளையும் மிஞ்சி விடுவீர்கள். உங்கள் குடும்பப் பிரச்சினைகளை வெளிக்காட்டிக்கொள்ள மாட்டீர்கள். ஆனால், அதே நேரத்தில் மற்றவர்களது பிரச்சினைகளை அறிந்துகொண்டு, அவர்களுக்கு ஏதேனும் செய்ய இயலுமானால் அதை செய்யவும் தவற மாட்டீர்கள்.

எல்லோரையும் கவர திடீர்திடீரென உரத்த குரலில் பேசுவீர்கள். அடித்துப்பேசியும், அதிரடியாகப் பேசியும் சாதனைகளை நிகழ்த்துவீர்கள். சுறுசுறுப்புக்குச் சொந்தக்காரர்களாக விளங்கும் நீங்கள் சமூகத்திற்காக உழைப்பவர்களின் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்ற ஆசையும் இருக்கும். உலக நடப்புகள் அனைத்தும் உங்களுக்குத் தெரியும் என்றாலும் அதை உள்ளத்திற்குள்ளேயே ஒளித்து வைத்துக்கொண்டிருப்பீர்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படி அமையப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

இரண்டிலே குருதான் நின்றால்,
இல்லத்தில் மகிழ்ச்சி கூடும்!
திரண்டதோர் செல்வம் சேரும்!
தேனான வாழ்வைக் காண்பீர்!
உறவினர் பகைதான் மாறும்!
உற்சாகம் உள்ளம் சேரும்!
வந்திடும் நோயும் தீரும்!
வரலாற்றில் பெயரும் சேரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்குப் பேரும், புகழும் வரவழைத்துக் கொடுக்கப்போகிறது. பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப்போகிறது. ஊரும், உலகமும் போற்றுமளவிற்கு உன்னத நிலை வந்து சேரப்போகிறது.

கவலை என்ற மூன்றெழுத்து உங்கள் அகராதியிலிருந்து விலகப்போகின்றது. வளமை, இனிமை, புதுமை போன்ற மூன்றெழுத்துக்கள் உங்கள் வாழ்வில் வந்து சேரப் போகின்றது.

வாக்கு வளம் பெருகும். வசதிகள் அதிகரிக்கும். தேக்கி வைத்த செல்வத்தை திறமை மிக்கவர்களின் ஆலோசனையோடு உபயோகப்படுத்திக்கொள்வீர்கள். பார்க்குமிடங்களில் எல்லாம் உங்கள் பெயர் பரவ, பரம்பரை சொத்துக்களும் உங்களுக்கு வந்து சேரும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக நிகழாமல் தடைப்பட்ட சுபகாரியப்பேச்சுக்கள் இப்பொழுது நினைத்தவுடன் நடைபெறத் தொடங்கும். நாட்பட்ட நோய்கள் அகலும். நலம் யாவும் வீடு வந்துசேரும்.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!**

குரு இரண்டாமிடத்தில் இருந்துகொண்டு 6,8,12 ஆகிய இடங்களை புனிதப்படுத்துகின்றார். எனவே, அந்த இடங்களெல்லாம் நன்மை செய்யும் இடங்களாக மாறப்போகின்றன. கடன், நோய், பகை, மனச்சஞ்சலம், பழிச்சொல், தியாகம், பங்காளிப்பகை, அச்சம், எதிர்ப்பு, வழக்கு, ஆயுள், அரசு வழி ஆதரவு, போராட்டம், காரியத்தடை, அலைச்சல், வீண் இழப்பு, எதிர்பாராத செலவு, தொழில் ஜீவனம், சேவை, வணிகம், புகழ், கௌரவம், சொத்து, சுகம், அதிகாரப் போக்கு, பிதுர்வர்க்க கடமை, முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிக்கும் இடங்கள் எல்லாம் குரு பார்க்கும் இடங்களாகி நன்மைகளைக் கொடுக்கப்போகின்றன.

எனவே, தொல்லைகளிலிருந்து விடுபடவும் எல்லையில்லாத நற்பலன்களை நீங்கள் பெறவும் சொல்லைச் செயலாக்கிக்

## மிதுனம்



காட்டவும், தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபாடு செய்யுங்கள்.

ஆறினை குருதான் பார்த்தால்,
அடைந்திடும் கடன்கள் யாவும்!
எட்டினைக் குருதான் பார்த்தால்,
இருந்த நோய் மறைந்துபோகும்!
பத்தினைக் குருதான் பார்த்தால்,
பாரினில் தொழில்கள் வாய்க்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

எனவே, பட்ட கடன்கள் தீரும். பரிதவிப்புகள் மாறும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். தெய்வ பலத்தையும் நீங்கள் வளர்த்துக்கொள்வதன் மூலம் ஆற்றல் மிக்கவர்கள் தானாகவே வந்து உங்களுக்கு ஒத்துழைப்புச் [illegible] முன்வருவர்.

கொடுக்கல் [illegible] இல்லையே என்று நினைத்தவர்கள் இப்பொழுது நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோம் என்று எடுத்துரைப்பார்கள். தேங்கிய வழக்குகள் வெற்றியாகும். தீர்ப்பு உங்கள் பக்கம் வந்து சேரும். தேக ஆரோக்கியம் சீராகும். தெளிவான சிந்தனை பிறக்கும்.

மண், பூமி சேர்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பணப்பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். சென்ற குருப்பெயர்ச்சியில் ஏற்பட்ட இழப்புகளை இப்பொழுது ஈடுகட்டுவீர்கள். மனக் கலக்கம் தீர வார வழிபாடும், மாத வழிபாடும், வருட வழிபாடும் என்று வழிபாட்டை வகைப்படுத்திக் கொள்ளுங்கள். ஜென்ம குரு விலகியதால் இனிச் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும்.

உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி வந்துசேரும். தொழில் நடத்துபவர்களுக்கு புதிய கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு கிட்டும். நாங்கள் உங்களுடன் கூட்டுச் சேர்த்துக் கொள்கிறோம் என்று நண்பர்கள் முன்வருவர்.

**சஞ்சாரப் பலன்கள்**

குருதன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை):- புத்துணர்ச்சியோடு செயற்படுவீர்கள். பொருளாதார நிலை மேலோங்கும். போட்டி பந்தயங்களில் வெற்றி கிட்டும். பொன்னான எதிர்காலத்தை வரவழைத்துக்கொள்ள புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். திருமணக் கனவுகள் நனவாகும். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

சனி சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை) :- வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். என்றாலும், அதில் பிரச்சினைகள் உருவாகும். நண்பர்களை நம்பி சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வியாபார விரோதங்கள் விலகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. பதவி உயர்வில் சில சிக்கல்கள் ஏற்பட்டு அகலும். தொழில் வியாபாரத்தில் அகலக் கால் வைக்க வேண்டாம்.

தந்தை வழி உறவில் சச்சரவுகள் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பதறாத காரியம் சிதறாது என்பது பழமொழி. எனவே, எந்தக் காரியமும் இனிதே முடியவேண்டுமானால் பதற்றத்தை தவிர்க்கவும். அதுமட்டுமல்ல, பக்கபலமாக இருப்பவர்கள் கோபமாகப்பேசினாலும் பொறுத்துக்கொள்வதே உத்தமம். பகை பாராட்டினால் மனக்கலக்கம் உருவாகும். அஷ்டமாதிபதியாகவும், ஒன்பதாமிடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சனியின் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் போது முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது.

புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை):- உறவினர்களின் ஆதரவு கூடும். வீடு, வாகனங்களை வாங்க வேண்டுமென்ற எண்ணம் வெற்றி பெறும். நூதன திட்டங்களை தீட்டி அதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருப்பர். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு!**

புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். யோக பலம் பெற்ற நாளில் சிவனையும் உமையவளையும் வழிபட்டு செல்வ வளத்தை உயர்த்திக் கொள்ளுங்கள்.

**மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சி குதூகலத்தை வரவழைத்துக்கொடுக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பெற்றோர் வழி ஆதரவு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அன்பும், அன்யோன்யமும் அதிகரிக்கும். வேடம் போட்ட உறவினர்கள் இனி பாசம் காட் [illegible] பொருட்களை வாங்கி [illegible] செல்வந்தர்களின் ஒத்துழைப்போடு சில நல்ல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பணபலம் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாம் என்ற சிந்தனை இல்லத்தில் உள்ளவர்களுக்கு உருவாகும்.

**அக்கறை செலுத்தவேண்டிய வக்ர காலம்!**

குருபகவான் 03.12.2014 முதல் 21.12.2014 வரை மக நட்சத்திரக் காலில் அதிசாரமாகச் செல்கின்றார். அதில் டிசம்பர் 17 முதல் வக்ர கதியில் இயங்குகிறார். இதுபோன்ற வக்ர காலங்களில் உங்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறும் பொழுது யோகத்தை வரவழைத்துக்கொடுக்கும்.

தொழில் தொல்லை அகலும். தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். விலகிச் சென்ற

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

வரன்கள் மீண்டும் வந்து சேரும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டுவந்து சேர்ப்பர். உற்சாகமும், தன்னம்பிக்கையும் உள்ளத்தில் குடிகொள்ளும்.

நாளை கடகம்..........



குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

**குருவின் வக்ர காலம்**

- **13.06.2014 முதல் 28.06. 2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்)**
- **29.06. 2014 முதல் 27.08 2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்)**
- **28.08.2014 முதல் 02. 12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக்காலில் குரு. (புதன் சாரம்)**
- **03.12.2014 முதல் 21.12. 2014 வரை மகம் நட்சத்திரக்காலில் குரு அதிசாரமாக செல்கிறார்.**
- **17.12. 2014 முதல் 21.12.2014 வரைகேது சாரத்தில் குரு வக்ர கதி.**
- **22.12. 2014 முதல் 14.04.2015 வரை ஆயிலியம் நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்.**
- **15.04. 2015 முதல் 04.07.2015 வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார்.**
- **05.07. 2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் உதவி இதுதான்

குழந்தைகள் இருக்கும் வீடோ, பெரியவர்கள் இருக்கும் வீடோ... பொதுவாக எல்லோர் வீடுகளிலும் இருக்க வேண்டிய முக்கியமான விடயம் - முதலுதவிப் பெட்டி.

முதலுதவி என்பது, சிறிய காயம் பட்டவர்களுக்கு மருந்து போடுவதில் தொடங்கி, பெரிய விபத்தில் சிக்கியவர்களுக்கு உயிர்காப்பது வரை மிக உன்னதமான விடயம்.

ஆரோக்கியத்தில் அக்கறை இருக்கும் ஒவ்வொரு மனிதரும் தெரிந்துகொள்ள வேண்டிய, செய்ய வேண்டிய சிறந்த உதவி முதலுதவி.

சிறு காயம் முதல் விபத்து வரை அனைத்துப் பாதிப்புகளுக்கும்




## மருத்துவ உலகம்

Health Care

உங்கள் நலம் உங்கள் கைகளில்

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன், "முதலில் என்ன செய்ய வேண்டும்?' என்பது மிக முக்கியம். "என்ன செய்ய வேண்டும்' என்பதைவிட, சில சூழ்நிலைகளில் என்ன செய்யக் கூடாது என்பதையும் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதனை இங்கே பார்ப்போம்.

அவசர காலத்தில் கைகொடுக்கும் இந்தக் குறிப்புகள் அனைத்தையும் வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். இதை எப்போதும் உடன் வைத்திருந்தால், ஆபத்துக் காலத்தில் கைகொடுக்கும். எதிர்பாராமல் நேரும் காயங்கள், விபத்துக்கள், விஷக்கடி மற்றும் பல பிரச்சினைகளுக்கு நீங்களே முதலுதவி செய்ய லாம். அதன் பின்னர் வைத்தியரிடம் அழைத்துச் செல்லலாம்.

நெஞ்சு வலி போன்ற மிகத் தீவிரமான பாதிப்பு ஏற்படும்போது, அந்தச் சில மணித்துளிகளுக்குள் வைத்தியரிடம் கொண்டுசெல்ல வேண்டும்.

அதற்குள், அவருக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், முதலுதவி செய்யப்பட வேண்டும்.

முதலுதவி முக்கியமான அடிப்படைக் கொள்கைகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இவை சகல அவசர சிகிச்சைகளுக்குமே பொதுவான விதிகள்.

**விதி 1**

பாதிக்கப்பட்டவருக்குத் தெரிந்தோ, தெரியாமலோ... நம்மால் எந்த ஊறும் நேர்ந்துவிடக் கூடாது. "உதவி செய்கிறோம்' என்று போய், நம்மை அறியாமல் அவர்களுக்கு எந்தக் கூடுதல் கஷ்டத்தையும் ஏற்படுத்திவிடக் கூடாது. சாதாரண எலும்பு முறிவாக இருந்தது, கூட்டு எலும்பு முறிவாக மாறிவிட நாமே காரணமாக இருந்துவிடக் கூடாது.

உதாரணத்துக்கு, ஒரு வாகன விபத்தில் அடிபட்டவரின் ஹெல்மெட்டைக் கழற்றும்போது கூட, மிக மிகக் கவனமாகக் கழற்ற வேண்டும்.

ஏனெனில், கழுத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல், நிலையாக இருப்பது முக்கியம். அதேபோல் கட்டடத்தின் உயரத்திலிருந்து ஒருவர் விழுந்துவிட்டால், அவரைத் தூக்கும்போது கழுத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

**விதி 2**

பாதுகாப்பு மிக முக்கியம். எந்த ஒரு அவசரகட்டத்திலும் மூன்று நபர்கள் இருப்பார்கள்.

அதாவது, பாதிக்கப்பட்டவர், உதவச் செல்லும் நாம், நமக்கு அருகில் இருப்ப வர்கள்... இந்த மூன்று பேருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**விதி 3**

பொது அறிவு முக்கியமாகத் தேவை. அங்கே உடனடியாகக் கிடைக்கும் அல்லது இருக்கும் வசதிகளை வைத்து எப்படி உதவலாம் என்ற சமயோசித புத்தியுடன் சாமர்த்தியமாகச் செயற்படும் வேகமும் வேண்டும்.

### இரத்தக்காயம் வெட்டுக்காயம்:

குழந்தைகள் விளையாடும் போதும் சாதாரணமாக நடக்கும் போதும் கீழே விழுந்து அடிபடுவதும் இரத்தம் வருவதும் சகஜம். அப்போது, காயப்பட்ட இடத்தை, குழாயிலிருந்து வரும் சுத்தமான நீரால் (running water) கழுவ வேண்டும். சவர்க்காரம் போட்டுக் கூடக் கழுவலாம்.

காயப்பட்ட இடத்தில் இரத்தம் வந்தால், சுத்தமான துணியால் அழுத்திக் கட்டுப்போட வேண்டும். பவுடர், சந்தனம், மஞ்சள், கோப்பித்தூள் என்று எந்தப் பொருளையும் காயத்தின் மீது போடக் கூடாது.

குழந்தைகளுக்கு உடலில் வலுக்குறைவு என்பதால், வெட்டுக்காயம், பூச்சிக்கடி போன்ற எந்த விபத்தாக இருந்தாலும், அவர்களால் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. எனவே முதலுதவிக்குப் பின்னர், உடனேவைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அலட்சியமாக இருக்கக் கூடாது.

### இரத்தக் கசிவு:

சிறிய காயம், கத்தி அல்லது பிளேடால் ஏற்பட்ட வெட்டுக் காயம், கீழே விழுந்து அடிபட்டது என இரத்தக் கசிவு எப்படி ஏற்பட்டாலும், எங்கிருந்து இரத்தம் வருகிறது என்பதை முதலில் கண்டறிந்து, இரத்தம் வருவதை நிறுத்த வேண்டும்.

வாய், மூக்கு, கை, கால், நெற்றி என எங்கிருந்து இரத்தம் வந்தாலும் சுத்தமான துணியை வைத்து அழுத்தி, இரத்தத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.


ஒருவேளை இரத்தம் மூக்கிலிருந்து வந்தால், அவரை முன்னோக்கிக் குனியச்செய்து, மூக்கின் மென்மையான முன்பகுதியை, விரல்களால் பிடித்துக் கொண்டு, வாயால் மூச்சுவிடச் செய்ய வேண்டும்.

மூக்கிலிருந்து வரும் இரத்தத்தை அவர் விழுங்கிவிடக் கூடாது. அதனால்தான் முன்னால் குனியச் சொல்கிறோம்.

தலையைப் பின்பக்கமாக சாய்த்து விடக் கூடாது. அப்படி சாய்த்தால், இரத்தம் வாய்க்குள் போய், நுரையீரலுக்குள் புகுந்துவிடும் அபாயம் உள்ளது.

எனவே நிமிரவே கூடாது. மூக்கு சிந்தச் செய்யவும் கூடாது. காதிலிருந்து இரத்தம் கசிந்தால், சுத்தமான துணியை வைத்து இரத்தத்தை நிறுத்த வேண்டும். காதுக்குள் எதையும் போட்டுக் குடையக் கூடாது.

**குறிப்பு:** இரத்தக் கசிவு அலது காயத் தின் மீது துணி போட்டால், அதை அப்படியே விட்டுவிட வேண்டும.




இரத்தம் நின்றுவிடடதா என்று பார்க்க, அதைத் திரும்பவும் எடுத்து எடுத்துப் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால், நின்றிருந்த இரத்தம் மீண்டும் வர ஆரம்பித்து விடும். முதலில் போட்ட துணி, இரத்தத்தால் நனைந்து விட்டால், அதன் மேலே தான் அடுத்தடுத்த துணி அல்லது டிரெஸ்ஸிங் பஞ்சைப் போட வேண் டுமே தவிர, முதலில் போட்ட துணியை எடுத்து விட்டுப் போடுவது தவறான செய்கை.

### வெட்டுப்படுதல்:

கை, கால், விரல் அல்லது கை போன்ற உறுப்புகள் ஏதேனும் வபத்தில் துண்டிக்கப்பட்டுவிட்டால், துண்டிக்கப்பட்ட உறுப்பை, சுத்தமான ஈரத்துணியில் சுற்றி, ஒரு பொலித்தீன் கவரில் போட்டு, அதை ஐஸ்கட்டிகள் நிரம்பிய பெட்டியில் போட்டு உடனடியாக வைத்திய சாலைக்கு, பாதிக்கப்பட்டவருடன் எடுத்துச் செல்ல வேண்டும். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, துண்டிக்கப்பட்ட உறுப்பை நேரடியாக ஐஸ் கட்டிகளுக்குள் போடக் கூடாது. சுற்றிலும்ஐஸ்இருககும்பையில்வைத்து, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் கொண்டு செல்ல வேண்டும்.

காது/மூக்கினுள் ஏதேனும் பொருளைப் போட்டுக்கொண்டால்,

காதுக்குள் ஏதாவது பொருள் போய்விட்டாலும், எடுக்க முயற்சிக்க வேண்டாம். குச்சி, "பட்ஸ்' போன்றவற்றால் எடுக்க முயற்சிததால், செவிப்பறை பாதிப்படைய வாய்ப்பு உண்டு. அதனால்காது கேட்காமலே கூடப்போய்விடலாம் எனவே, உடனே காது, மூக்கு, தொண்டை நிபுணரிடம் போய் விடுவது நல்லது.

குழந்தைகள் விளையாடும் போது, ஏதேனும் சிறு மணிகள் அல்லது சிறு பயறுகள் போன்றவை மூக்கினுள் போய்விடக்கூடும். சில பெண்கள் மூக்குத்தியைக் கழற்றும் போது, திருகாணி கூடப் போய்விட வாய்ப்பு உண்டு. அப்படிப் போயவிட்டால், "அதை எடுக்கி றேன என்று அந்தப் பொருளை இன்னும் கொஞ்சம் உள்ளே தள்ளி, "அவசர நிலைக்கு' ஆக்கிவிடா மல், உடனடியாக டாக்டரிடம் போய் விட வேண்டும். மூக்கைச் சிந்த வைக்கவும் கூடாது.

### குழந்தை ஏதேனும் விழுங்கி விட்டால்

குழந்தைகள் தவறுதலாக ஏதேனும் விழுங்கிவிட்டாலோ அல்லது சாப்பிடும்போது ஏதேனும் உணவு தொண்டையில் எக்குத் தப்பாகச் சிக்கிக்கொண்டாலோ, கையை விட்டு எடுக்கவோ, விரலை விட்டு எடுக்கவோ, கண்டிப்பாக முயற்சிக்கக் கூடாது.

தொண்டையில் ஏதேனும் பொருள் சிக்கிக்கொண்டால், அதை எடுப்பதற்கு, "ஹீம்லிக் மெனுt (HEIMLICH MANEUVER) என்ற செய்முறை இருக்கிறது.

இந்த முதலுதவி சிகிச்சை முறைப்படி தெரிந்தவர்கள், அதை உபயோகித்துப் பொருளை எடுக்க லாம். இல்லையெனில் உடனடியாக வைத்தியசாலைக்குக்குப்போய் விட வேண்டும். ஏனென்றால், விழுங்கிய எட்டு நிமிடங்களுக்குள் அந்தப் பொருளை வெளியே எடுக்க வேண்டும். (அடுத்த வாரம் தொடரும்)

**ஜூனியர்விகடன்**

# இலங்கையின் இறையாண்மையை சவாலுக்குவிட இடமளியோம்

## ஜாதிகஹெல உறுமய எச்சரிக்கை

இந்தியாவின் மோடியல்ல எந்தவொரு நாட்டுக்கும் இலங்கையின் இறையாண்மையை சவாலுக்கு உட்படுத்த இடமளிக்கமாட்டோம் என எச்சரிக்கை விடுக்கும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, தமிழ் மக்களுக்கு 13ஐ கொடுப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பது இலங்கையர்களே தவிர இந்தியர்கள் அல்ல என்றும் அக்கட்சி தெரிவித்தது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த ஸ்ரீவர்ண சிங்க மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் பிரதமராக மன்மோகன் சிங் அல்ல நரேந்திர மோடி வந்தாலும் அது எமக்கு பெரிய விடயமல்ல. இலங்கையின் பிரச்சினைகளை தீர்க்கும் உரிமையும் அதிகாரமும் இலங்கை மக்களுக்குள்ளது.

அந்த அதிகாரத்தை இந்தியர்களுக்கு வழங்கவோ அல்லது எமது இறையாண்மையை சவாலுக்கு உட்படுத்தவோ இடமளிக்க மாட்டோம்.

அவ்வாறு எல்லை மீறி இந்தியா எமது நாட்டின் மீது அழுத்தத்தை பிரயோகிக்க முனைந்தால் மக்களை வீதியில் இறக்கி போராடுவோம். 13ஆவது திருத்ததத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டி யது இலங்கை மக்களுக்குரிய பொறுப்பாகும்.

அத்தோடு இங்குள்ள தமிழ் மக்களுக்கு 13ஐ வழங்குவதா இல்லையா? அத்தோடு எந்தெந்த உரிமைகளை வழங்க வேண்டு மென்பதை இந்தியா தீர்மானிக்க முடியாது.

அதனை நாமே தீர்மானிப்போம். நாமே வழங்குவோம். நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு ஒன்று தேவை. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிககப்படாத அதிகாரப் பரவலாக்கல் இல்லாத அரசியலமைப்பே நாட்டுக்கு தேவையாகும் என்றும நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார். (2)

# மோடி இலங்கை பயணம் குறித்து தீவிர ஆராய்வு

## பா.ஜ.கட்சி பேச்சாளர் தெரிவிப்பு

(சென்னை)

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியின் முதல் வெளிநாட்டு விஜயம் இலங்கையாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து மோடி தீவிரமாக கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அயல் நாடுகளான பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு மோடி விஜயம் செய்யவுள்ளதாக பாரதீய ஜனதா கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி முதல் வெளிநாட்டு விஜயமாக இலங்கைக்கு பயணம் செய்யக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு தந்திரோபாய காரணிகளுக்காக இலங்கையுடன் மிக நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள புதிய அரசாங்கம் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள சீதை அம்மன் ஆலயத்திற்கு நரேந்திர மோடி விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கைக்கு விஜயம் செய்வார் என தெரிவிக்கப்படுகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**59**

இந்தக் குளத்தில் எத்தனையோ பேர் கல்லெறிந்திருக்கிறார்கள்.

எறிந்த சில கற்கள் ஆழம் சென்று அடையுமுன்னே அலைகள் அடங்கியிருக்கின்றன.

ஆனால் ஆழத்திற்குச் சென்று அமிழ்ந்த பிறகும் இன்றுவரை அலைகளை அனுப்பிக் கொண்டிருக்கும் கல் எறிந்தவள் நீதானடி கண்ணே!

பப்பாளிக்காய் நகம்பட்டவுடன் பால் வடிப்பது மாதிரி நினைவலைகள் விசுக்கென்று எழுகிற நிமிடங்களிலெல்லாம் என் கண்ணில் பொசுக்கென்று நீர் புறப்படுகிறது.

இன்று முகம் பார்க்க முடியாதவளே!

சில துளிகள் கிழிகிறவரை சாயம் போகாதது மாதிரி உன் முகமென்னும் பழைய ஞாபகச் சித்திரம் என் இதயம் கிழிகிற வரைக்கும் அழியாது அன்போ

எத்தனையோ அலைகளில் நான் அமிழும் போதும்- வாழ்க்கையின் புயலில் சருகாய் நான் அலையும்போதும்- ஞாபகங்களோடு எனக்கிருக்கும் தொடர்பைத் துண்டித்துவிட்டு உறக்கத்தின் பள்ளத்தாக்கில் நான் இறங்கும் போதும் என் முகத்துக்குச் சில சென்ரி மீற்றர் தூரத்தில் உன் முகம் மிதந்து கொண்டேயிருக்கிறது.

உனக்கும் எனக்கும் மத்தியில் காலம் சுவரெழுப்பியிருக்கலாம்.

நீ நினைக்கலாம் அதைச் சீனத்துச் சுவரென்று; நான் நினைக்கிறேன் அதைக் கண்ணாடிச் சுவரென்று.

உன்னைத் தொட்டுக் கொள்வதிலிருந்து அந்தச் சுவர் என்னைத் தடுக்கலாம்.

ஆனால் உன்னை தரிசிப்பதிலிருந்து தடுக்க முடியுமா?

ஓ! எத்தனை வருடங்கள்...

நீ நினைக்கிறாயா நான் உன்னை




மறந்திருப்பேன் என்று.

எப்படி...? எப்படி மறந்திருப்பேன்?

மரங்களுக்கு இலையுதிர்காலம் இருக்கலாம்; கிளையுதிர்காலம் இருக்குமோ?

இலவங்காய் காய்ந்தாலும் தலையணைக்குப் பஞ்சு தருவது மாதிரி நம் கனவுகள் காய்ந்து விட்டாலும் கண்ணீர்த்துளி கவிதைக்கு மை தந்திருக்கிறது தோழி!

நாம் தொட்டுக் கொள்ளவில்லை;
அது இளமைக்கு லாபம்.
நாம் பிரிந்து விட்டோம்;
அது இலக்கிய லாபம்.

நாம் கண்களால் மட்டுமே ஸ்பரிசித்துக் கொண்டோம். அந்தக் கண்களின் ஸ்பரிசத்திலிருந்த பரவசத்தை என் இதயமும், நரம்புகளும், தசை நார்களும், மயிர்க்கால்களும் இதுவரை வேறெதிலும் எய்தவில்லை பெண்ணே.

ஓர் அநாதை வீணையை அவசரமாய் ஒரு தென்றல் வந்து மீட்டி விட்டுப் போனதைப் போல் நீ போய் விட்டாய்.

வீணையைத்தானே ரசிப்பார்கள்; ஆனால் வீணையே தன்னை ரசித்தது நீ மீட்டியபோது மட்டும் தான்.

இன்று என் தலையைக் கவ்வுகிற கிரீடங்களால் நான் கௌரவப்படவில்லை.

நான் போகும் பாதையின் இருமருங்கிலும் பூக்கள் எனக்கு குட்மோர்னிங் சொல்வதில் நான் புளகாங்கிதம் அடையவில்லை.

உலகியலும் சம்பிரதாயங்களும் பொருளாதாரமும் என்னைக் கலைஞனாய் இருக்குமாறு கட்டாயப்படுத்தி விட்டன.

ஒரு காலத்தில் உனக்காகப் பூப்பதில் மட்டுமே உள்ளங்களித்த இந்த ரோஜாச்செடியை- சங்கிலியால் பிணைத்து அத்தருக்கு அவசரம் என்பதனால் நின்ற இடத்தில் பூப்பூக்கச் சொல்லி நிர்ப்பந்திக்கிறார்கள்.

இந்த ரோஜாச் செடி சம்பளத்திற்குப் பூப்பூக்கச் சம்மதித்துவிட்டது.

ஆனால், நானாக உனக்காகத் தானாகப் பூப்பூத்த போதுதான் என் ரோஜாக்களில் நித்திய வாசனை நிறைய இருந்தது.

இப்போதும்... எப்போதாவது- உன்னை நினைத்துப் பூக்கிறபோது உயிர் சிலிர்க்கிறது.

நீ எங்கே இருக்கிறாய் என்று எனக்குத் தெரியுமென்பது உனக்குத் தெரியாது.

கைதட்டல் சத்தத்திற்கு மத்தியில் உன் கண் சிமிட்டல் சத்தம் கேட்காது என்றுதான் தூரத்தில் எங்கோ ஓர் ஓரத்தில் நின்று நீ என்னை நினைந்து நினைந்து நெஞ்சுருகிக் கொண்டிருக்கிறாய்.

(தொடரும்)

-வைரமுத்து-

# தமிழக மீனவர்கள் கைது விடயத்தில் தீர்க்கமான முடிவை எடுங்கள்

## "ஜெ" மோடிக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப் பட்டமையை, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் கடுமையாக கண்டித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றையும் அவர் அனுப்பியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு.

45 நாட்கள் மீன்பிடி தடைக்கு பின்னர் முதன் முதலாக கடலுக்கு சென்ற தமிழக மீனவர்க்ள் 33 பேரையும் அவர்கள் சென்ற 7 படகுகளையும் இலங்கை கடற் படை பிடித்து தடுத்து வைத்துள்ளது மிகவும் மனவேதனையை அளிக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த 3 ஆண்டுகளில், பலமுறை முன்னாள் பிரதமருக்கு, கடுமையாக இராஜதந்திர நடவடிக்கைகள் எடுக்கக் கோரியும், இப்படியான நிகழ்வுகளை தடுக்கும்படி கோரியும் பல தடவைகள் கடிதம் எழுதியதையும், எனினும் எந்த நடவடிக்கையும் இல்லை என்றும் தமிழக முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது தமிழக மீனவர்கள் இலங்கை கடறபடையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவ சமூகத்தில் ஒரு பெரிய அதிர்ச்சி அலையை ஏற்ப்டுத்தியுள்ளது என்றும், மத்தியில் புதிய அரசு வந்த பின்னர், இப்படியான தாக்குதல்கள் இல்லாதொழிந்து போகுமென்றும் அந்தச் சமூகத்தில் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது என்றும் தமிழக முதல்வர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னர் ஆட்சி செய்த ஐக்கிய முற்போக்கு கூட்டமைப்பின் அரசாங்கம், இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து எடுத்த நடவடிக்கைகள் வலுவில்லாமல் இருந்தன.

அது இலங்கை கடற்படைக்கு தைரியமூட்டி, அவர்கள் அப்பாவி தமிழக மீனவர்களை அவர்களின் பாரம்பரிய கடல் பிரதேசத்தில் தாக்குதலுக்கு உள்ளாவதற்கு வழி வகுத்தது என்றும் ஜெயலலிதா, மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

மோடியின் தலைமையிலான புதிய அரசு, பழைய அரசின் நிலைபாட்டிலிருந்து விலகி மீனவர்கள் விடயத்தில் ஒரு தீர்க்கமான, இறுதியான நிலைப்பாட்டை எடுக்கும் என தான் நம்புவதாகவும் தமிழக முதல்வர் தனது கடிதத்தில் கூறியுள்ளார். (2)

# பௌத்த சாசன அமைச்சு ஜனாதிபதியின் கீழ்?

(கொழும்பு)

பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சு ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சு தற்போது பிரதமரின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பௌத்த சாசன மற்றும் சமய விவகார பிரதி அமைச்சுப் பதவி பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

அண்மைக் காலமாக நாட்டில் இடம்பெற்று வரும் மத முரண்பாடுகளையும், மதங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப் படாமை ஆகிய காரணிகளை கருத்திற் கொண்டும் அமைச்சுப் பதவியை பிரதமரிடமிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

பிரதமரின் செயலாளர் ஒருவர் எதனோல் கொள்கலன் ஒன்றை இறக்குமதி செய்ய கடிதமொன்றை வழங்கியிருந்தமைக்கு பௌத்த பிக்குகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்த காரணிகளினால் அமைச்சுப் பதவியை ஜனாதிபதியே பொறுப்பேற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளார். (2)

# விடுதலையாகும் கைதிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படும்

நீண்ட காலமாக சிறைகளில் தண்டனை அனுபவித்து விடுதலையாகும் கைதிகளுக்கு 50ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒன்றை வழங்க திட்டமிட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துளளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

விரைவில் இந்தக் கொடுப்பனவு தொகை வழங்கப்படவுள்ளது. சிறைச்சாலை பயிற்சிகளை பூர்த்தி செய்து நன்னடத்தையுடன் செயற்படும் நபர்களுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படும்.

இவ்வாண்டில் ஆயிரம் கைதிகளுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது. இதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

கைதிகள் இந்தப் பணத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பது குறித்து கண்காணிக்கப் படும்.

கைதிகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகள் பணக் கஷ்டம் காரணமாக மீண்டும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (2)

# சீரற்ற காலநிலையால் ஏழு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு முதல் இது வரையில் சீரற்ற காலநிலை காரணமாக ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.

அகலவத்தை கித்துல்கந்த என்னும் இடத்தில் இடம்பெற்ற மண் சரிவினால் ஐந்து பேர் கொல்லப் பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் மூன்று பேர் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மாலம்பை பொத்து ஆராவ என்னும் இடத்தில் இடம் பெற்ற மண் சரிவில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். நாட்டின் பல பாகங்களிலும் கடுமையான மழை பெய்து வருவதனால் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நலனும் இலங்கை உறவும்

பிரதமர் பதவியை நரேந்திர மோடி ஏற்பதற்கு முதல் நாள் ஆர்.எஸ்.எஸ் இயக்கத் தளபதிகளில் முக்கியமானவரும் பா.ஜ.கவின் தேசிய செயற்குழு உறுப்பினருமான சேஷாத்திரி சாரி ஈழத்தமிழர் பிரச்சினைக் குறித்து திட்டவட்டமான கருத்துக்களை வெளியிட்டார்.

'இந்திய- இலங்கை உறவு என்பது தமிழர்கள் பிரச்சினையால் பகையாகிவிடக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகளை கொழும்பு உண்மையாகவும் சுமூகமாகவும் தீர்க்கும் என பா.ஜ.க. கருதுகிறது. இதற்காக அந்த அரசு முயற்சிப்பதாகவும் நம்புகிறது. இலங்கை அரசுக்கு கால அவகாசம் தருவது அவசியம் என்று கூறியுள்ளார்.

அதாவது, இந்திய-இலங்கை உறவு மிக முக்கியமானது. தமிழர்கள் பிரச்சினையால் அது பகையாகிவிடக் கூடாது என்று கூறியதன் மூலம் தமிழர்கள் பிரச்சினையை விட இலங்கையின் உறவு முக்கியமானது என்பதை அழுத்தமாகவும் திருத்தமாகவும் அவர் கூறியிருக்கிறார்.

ஜெயவர்த்தனா, பிரேமதாச, சந்திரிக்கா ஆகியோரின் காலங்களில் அதாவது 1987முதல் 2003வரை அவகாசம் அளிக்கப்பட்டும் பல முறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும் நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் மேற்கொள்ளப்பட்டும் எடுக்கப்பட்ட முடிபுகளை சிங்கள அரசு நிறைவேற்றவில்லை. 2009ஆம் ஆண்டு போர் முடிந்து 5ஆண்டுகள் கடந்த பின்னும் தமிழர்களின் முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

2012 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையம் இப்பிரச்சினையில் தலையிட்டு போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களையும் போர்குற்றங்களையும் விசாரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு 3 ஆண்டு கால அவகாசம் அளித்தது. அதற்கிணங்க இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழு அளித்த பரிந்துரைகளையும் நிறைவேற்றுவதற்கு மகிந்த ராஜபக்ச மறுத்துவிட்டார்.

2013ஆம் ஆண்டில் மீண்டும் சர்வதேச விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை கோரினார். அதே ஆண்டில் மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றபட்ட போதிலும் அதை ஏற்க இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.

2014 ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் சர்வதேச புலன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த விசாரணைக்குழுவை தங்கள் நாட்டிற்குள் அனுமதிக்க முடியாது என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

கடந்த காலத்தில் நடைபெற்ற இவையத்தனையும் சேஷாத்திரி அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனாலும் மகிந்த ராஜபக்சவுக்குக் கால அவகாசம் கொடுக்கச் சொல்கிறார்.

இலங்கையின் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை தனது சாட்சிக்கு சேஷாத்திரி அழைத்துள்ளார். ஆனால் தன்னுடன் இந்தியாவுக்கு வருமாறு இலங்கை ஜனாதிபதி விடுத்த அழைப்பை சி.வி.விக்னேஸ்வரன் ஏற்க மறுத்து தனது தலைமையில் உள்ள வடமாகாண அரசுக்கு அதிகாரங்கள் எதுவும் கடந்த எட்டு மாதங்களாக வழங்கப்படவில்லை. தமிழர்கள் பிரச்சினை எதுவும் தீர்க்கப்படவில்லை என்று கூறி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இந்தியாவுக்கு வர மறுத்துவிட்டதை சேஷாத்திரி சாமர்த்தியமாக மறைத்திருக்கிறார்.

இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். அப்படியானால், பாகிஸ்தானின் ஓர் அங்கமாக இருந்த கிழக்கு வங்க மக்கள் தனிநாடு கோரி போராடிய போது வங்கதேச சுதந்திர அரசை உடனடியாக இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் ஜனசங்கத் தலைவர் ஏ.பி.வாஜ்பாய் பேசியதையும் வங்கதேசத்திற்கு உடனடியாக இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்றும் கூறி டெல்லியில் 1971ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி ஜனசங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியதையும் சேஷாத்திரி மறந்து போனாரா?

பாகிஸ்தானின் சட்ட திட்டத்திற்கு உட்பட்டுத்தான் கிழக்கு வங்கப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று சேஷாத்திரியும் அவர் சார்ந்திருந்த ஜனசங்கமும் அன்று பேசினார்களா? இலங்கையில் பிரிவினையை எதிர்ப்பதாக இன்று கூறுகிற சேஷாத்திரி கிழக்குப் பாகிஸ்தான் பிரிவினையை அன்று ஆதரித்தது ஏன்?

சார்க் நாடுகளில் ஒன்றான இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை தனது பதவியேற்பு விழாவிற்கு மோடி அழைத்ததில் தவறு இல்லை என்று சேஷாத்திரி வாதாடுகிறார்.

இந்தியாவில் வாழும் பிற தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் சார்க் நாடுகளில் யாரும் இனப்படு கொலைக்கு ஆளாகவில்லை. தமிழ்நாட்டு மக்களோடு தொப்புள்கொடி உறவு கொண்ட மக்கள்தான் இலங்கையில் படுகொலைக்கு ஆளாகியுள்ளார்கள். அதற்கு காரணமான இலங்கை அரசை அழைப்பது பெருந்தவறு என தமிழக மக்கள் கருதுகிறார்கள்.

இலங்கையைச் சுற்றி இந்தியக் கடற்படை காவல் காத்த போது பா.ஜ .க அரசில் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த ஜார்ஜ் பெர்ணான்டஸ் இந்திய கடற்கரையைக் காவல் காப்பதுதான் நமது கடற்படையின் கடமை; மற்றொரு நாட்டின் கடற்கரையை காப்பது அல்ல என்று கூறி தமது கடற்படையை திரும்ப அழைத்தார்.

இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தையில் 1987ஆம் ஆண்டு இந்திய- இலங்கை உடன்பாட்டிற்கிணங்க 13ஆவது சட்டதிருத்தத்தை முழுமையாகவும் சீக்கிரமாகவும் நிறைவேற்ற வேண்டும்; மாகாண அரசுக்கு நிலம், பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும்; தமிழக மீனவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் ஆகியவை முக்கிய இடம் பெற்றதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

இலங்கை அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் 13 ஆவது சட்டத்திருத்தம் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய- இலங்கை உடன்பாட்டில் வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழர்களுக்கு என்று தனியாக ஒரு மாகாணம் அமைக்கப்பட வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க 13ஆவது சட்ட திருத்தத்தை இலங்கை அரசு கொண்டு வந்தது. தமிழர்களுக்கு தனியாக ஒரு மாகாணம் தருவதை சீர்குலைப்பதற்காக சின்னஞ் சிறிய நாடான இலங்கையில் சிங்களவர் பகுதிகளுக்கென எட்டு மாகாணங்களையும் தமிழர்களுக்கு ஒரு மாகாணத்தையும் உருவாக்கினார்கள்.

இலங்கையில் மத்திய அரசே சிங்கள அரசாக இருக்கும்போது அவர்களுக்கென்று தனியாக எட்டு மாகாணங்கள் தேவையில்லை. தமிழருக்கு அளிக்கப்பட்ட மாகாணத்திற்கு நிலம், பொலிஸ் அதிகாரம், நிதி ஆகிய அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. வேண்டுமென்றே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை துடைப்பதற்கு ராஜீவ் காந்தியின் காலத்திலிருந்து மன்மோகன்சிங் காலம்வரை இருந்த காங்கிரஸ் அரசுகள் எதுவும் செய்யவில்லை.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடியரசுத் தலைவரான பிறகு அவரின் மறைமுகத் தூண்டுதலின் பேரில் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டதை எதிர்த்து இலங்கை உச்சநீதி மன்றத்தில் சிங்கள தீவிரவாத அமைப்பு ஒன்றினால் வழக்குத் தொடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டம் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி உச்சநீதிமன்றம் இந்த இணைப்பு செல்லாது என்று தீர்ப்பளித்தது. உடனடியாக இதைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வடக்கு- கிழக்கு மாகாணங்களை பிரித்தார்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை தவறானது, இந்திய- இலங்கை உடன்பாட்டிற்கு எதிரானது என கண்டிக்கவோ திருத்தவோ மன்மோகன் சிங் அரசு முன்வரவில்லை.

இப்போது புதைகுழிக்குப் போய்விட்ட 13 ஆவது சட்ட திருத்தத்தை நிறைவேற்றச் சொல்லி வற்புறுத்துவது, போகாத ஊருக்கு புரியாத வழி காட்டுவதாகும்.

இலங்கையில் தமிழர் பகுதியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது. தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டு உள் நாட்டிலேயே அகதிகளாக வாழும் அவலம் நீடிக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏராளமான சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகின்றன. அவர்களின் பாதுகாப்பிற்காக சிங்கள இராணுவ முகாம்களும் அமைக்கப்படுகின்றன.

தமிழ்ப் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் பரிதாபம் நீடிக்கிறது. சிங்கள இராணுவத்தின் பாலியல் வன்முறைக்கு அவர்கள் தொடர்ந்து ஆளாக்கப்படுகிறார்கள். தமிழ் இளைஞர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டு காணாமற் போகிறார்கள்.

இந்தக் கொடுமைகளை குறித்தும் இவற்றைத் தடுத்து நிறுத்துவது குறித்தும் உறுதியான நடவடிக்கை எடுக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அரசு முன்வர வேண்டும். இலங்கை அரசு அளிக்கும் வெற்று வாக்குறுதிகளை நம்பி செயலற்றுக் கிடந்த மன்மோகன் சிங் அரசைப் போல புதிய அரசு இருந்துவிடக்கூடாது.

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து சேஷாத்திரி அளித்த விளக்கத்தை தேர்தலுக்கு முன் அளிக்க தமிழக சாதுரியவான்கள் தடுத்துவிட்டதாக அவர் கூறியிருக்கிறார்.

அதைப் பார்க்கும் போது பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையிலும் பிரதமர் நரேந்திர மோடி பேசிய கூட்டங்களிலும் ஈழத் தமிழர் பிரச்சினை இடம்பெறாமல் போனதற்கும் சேஷாத்திரியின் விளக்கத்திற்கும் ஒரே பின்னணி இருப்பது புரிகிறது.


-பழ.நெடுமாறன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சேவை வாகனங்களுக்கு மஞ்சள் நிற வர்ணம் பூச தீர்மானம்

## அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க தெரிவிப்பு



பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு 14 பேர் கொண்ட ஆணைக் குழுவொன்றை தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க நியமித்துள்ளார்.

தனியார் போக்குவரத்து அமைச்சர் என்ற ரீதியில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இதற்கமைய பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பாடசாலைச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்தார்.

தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சின் செயலாளர், தனியார் போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், மோட்டார் வாகனத் திணைக்கள அதிகாரிகள், கல்வி அமைச்சின் பிரதி நிதிகள், போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதிகள், நீதி அமைச்சின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் பிரதிநிதிகள், பாடசாலை வான் சேவையில் ஈடுபடுபவர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 14 பேரைக் கொண்டதாக இந்த ஆணைக் குழு நியமிக்கப் பட்டுள்ளது.

இக்குழுவினர் பாடசாலை வான் சேவை தொடர்பான சகல விடயங்கள் குறித்தும் ஆராய்ந்து எதிர் வரும் ஜுலை மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளனர். இந்த அறிக்கை பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தப் பட்டு கருத்துக்கள் பெறப்பட்டு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்என அமைச்சர் கூறினார்.

பாடசாலை வான் சேவையில் ஈடுபட்டுள்ள வாகன உரிமையாளர்களுக்கும், அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன் தினம் நடைபெற்ற செயலமர்விலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

பாடசாலை சேவையில் ஈடுபடும வான்களின் தரங்கள், சாரதிகளின் உடற்தகுதி, மாணவர்கள் அமர்ந்து செல்லக்கூடிய இருக்கை வசதிகள், வாகனத்தில் காணப்படும் காற்றோட்ட வசதிகள், முதலுதவிப் பெட்டிகள். உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து, இந்த ஆணைக்குழு ஆராய்ந்து அறிக்கையொன்றைத தயாரிக்கும் என்றும் அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க கூறினார்.

பாடசாலை சேவையில் ஈடுபட்டுள்ள வான்கள் தனியாகத் தெரிவதற்கு மஞ்சள் நிற வர்ணம் பூசுவதற்கு தீர்மானித்துள்ளோம். இது தொடர்பில் இன்னமும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. முதற்கட்டமாக பாடசாலை சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்கள் அனைத்துக்கும் ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

அதே நேரம், பாடசாலை சேவையில் ஈடுபட்டிருக்கும் வாகனங்களில் எதிர் காலத்தில் நவீன தொழில்நுட்பங் களைப் பொருத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

இதற்கமைய பாடசாலை வாகனம் ஒன்றில் செல்லும் பிள்ளை வாகனத்தில் ஏறியமை, பாடசாலைக்குச் சென்று இறங்கியமை போன்றவற்றை கையடக்கத் தொலைபேசிகளில் பெற்றோர் குறுந்தகவலாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

பிள்ளை இருக்கும் இடத்தை அறிந்துகொள்வதற்கு இது உறுதுணையாக அமையும் என்பதுடன், துஷ்பிரயோக சம்பவங்களைத் தடுப்பதற்கும் முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். பாடசாலை மாணவர்களின் வாகனங்களில் எல்.சி.டி தொலைக் காட்சியைப் பொருத்தி அவற்றில் பாடத்துடன் தொடர்புபட்ட காட்சிகளை காண்பிப்பது குறித்தும் இந்தக் குழு ஆராயும்.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறைப்பதுடன் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் எனறும் அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க மேலும் தெரிவித்தார். (2)

# சட்டவிரோதமாக தங்கியிருப்போரை வெளியேற்ற சவுதி அரசு நடவடிக்கை

விசா காலம் முடிவடைந்தும் சட்ட விரோதமாக நாட்டிற்குள் தங்கியிருப்பவர்கள் கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்தாலும் ஆபத்தான நிலையில் இருந்தாலும் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சையளிப்பதில்லையென சவுதி அரசு முடிவு செய்துள்ளது. இதனால் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையரை உடனடியாக இலங்கை தூதரகம் ஊடாக நாடு திரும்புமாறு இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கேட்டுக் கொள்வதாக பணியகத்தின் பேச்சாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிக்கப்படமாட்டாது என்பதால் வேலைவாய்ப்பு பணியகம் இலங்கைத் தூதரகம் ஊடாக பெருந்தொகை பணத்தை செலவு செய்து தனியார் வைத்தியசாலைகளில் இலங்கையருக்கு சிகிச்சை பெற்றுக்கொடுத்துவந்தது.

எனினும், அரச வைத்தியாலைகளைப் போன்று தனியார் வைத்தியசாலைகளிலும் விசா காலம் முடிவடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்குவதில்லை என்ற முடிவையும் சவுதி அரசு எடுத்துள்ளதால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

எனவே விசா காலம் முடிவடைந்தும் சவுதியில் தங்கியிருக்கும் இலங்கையர் உடனடியாக இலங்கைத் தூதரகம் ஊடாக நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய்து கொள்ளுமாறும் இலங்கையிலுள்ளவர்களும் சவுதியிலுள்ள தமது உறவினர்களுக்கு அறிவிக்குமாறும் மங்கள ரந்தெனிய கேட்டுக் கொண்டார். விசா காலம் முடிவடைந்த நிலையில் சட்டவிரோதமாக சவுதி அரேபியாவில் தங்கியிருந்த 16 ஆயிரம் இலங்கையருள் 14 ஆயிரம் பேர் சவுதி அரசு அறிவித்த பொது மன்னிப்பு காலத்தினுள் இலங்கைக்கு திரும்பியிருந் தனர். எனினும் இரண்டாயிரம் பேர் நாடு திரும்பவில்லை.

சவுதி அரசு தற்போது அறிவித்துள்ள புதிய நடைமுறையின்படி மேற்படி 2ஆயிரம் பேரும் பாதிக்கப் படலாம் என்பதாலேயே உடனடியாக நாடு திரும்புமாறு பணியகம் அறிவித்தல் விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# வெங்காய செய்கையாளர்களுக்கு கமநல வங்கி நிதியுதவி

பெரிய வெங்காய உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக பெரிய வெங்காய விவசாயிகளுக்கு 2 கோடியே 62 இலட்சம் ரூபா நிதி கமநல வங்கி நிதியத்தினால் வழங்கப்படும்.

இந்தப் பெரும் போகத்தில் இந்த நிதி வழங்கப்பட உள்ளது. மேலும் தற் போது பெரிய வெங்காயத்தை உற் பத்தி செய்யும் அநுராதபுரம், மாத் தளை மாவட்ட விவசாயிகளுக்கு 9 வீத குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விசேட கருத் திட்ட அமைச்சர எஸ்.எம். சந்திர சேன தெரிவித்தார்.

உயர்ரக விதைகளையும் உரத்தையும் அத்துடன் உற்பத்திக்காக நிதி வசதிகளையும் வழங்கி பெரிய வெங்காயத்தில் இலங்கையை தன்னிறைவு காணச் செய்வதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் குறிக்கோள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எது தகுதி?

ஓர் ஆட்சித் தலைவர் இருந்தார்.

அவருடைய தேசத்தில் மாநிலங்களை நிர்வாகம் செய்வதற்காக ஆளுநர்கள் இருந்தார்கள். ஒரு மாநிலத்தில் ஆளுநர் பதவி வெற்றிடமாக இருந்தது. அந்தப் பதவிக்கு இரண்டு பேரைப் பரிந்துரை செய்திருந்தார்கள்.

அவர்களிருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காக அவர்களைத் தன் வீட்டிற்கு வந்து சந்திக்குமாறு கட்சித் தலைவர் அழைத்திருந்தார்.

குறித்த நேரத்தில் ஒருவர் மட்டும் வந்து சேர்ந்தார். வணக்கம் சொல்லி அருகில் அமர்ந்தார். அன்பாகப் பேசினார்.

அவருடைய முகம் தெளிவாக இருந்தது. போட்டிருந்த உடையும் மிகவும் அழகாக சுத்தமாக இருந்தது.

அளவுக்கு அதிகமாக எந்த வார்த்தையும் அவர் உபயோகப்படுத்தவில்லை. அவர் எல்லா வகையிலும் ஒரு நல்ல தலைவராக இருப்பதாக அந்த ஆட்சித் தலைவர் உணர்ந்தார். அவர்கள் இருவரும் சம்பாசித்துக் கொண்டிருந்தனர்.

இன்னொருவர் இன்னும் வந்து சேரவில்லை.

குறிப்பிட்ட நேரம் கடந்து விட்டது.

சிறிது நேரத்தில் அவசர அவசரமாக அவர் ஓடி வந்து சேர்ந்தார். வந்ததும் காலதாமதம் ஆனதற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.அப்படிக்கேட்டுக்கொண்டே தன்னுடைய உடையில் படிந்திருந்த புழுதியைக்கையால் தட்டி சுத்தப் படுத்திக் கொண்டார். அதன்பின் சொன்னார்.

தலைவரே! தாமதமாக வந்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும். நான் முன்னாடியே புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். வரும் வழியில் வயதான அம்மா ஒருத்தரைப் பார்த்தேன். அவருடைய கழுதையின் கால்கள் இரண்டும் பாறைகளுக்கு நடுவில் மாட்டிக்கொண்டு இருந்தது. அதை வெளியே எடுப்பதற்கு அந்த அம்மா மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

அதைப்பார்த்த பின்னரும் விட்டு வர முடியவில்லை. ஒரு வழியாக அதை மீட்டு அவர்களிடம் ஒப்படைத்து விட்டு வருவதற்குள் நேரமாகிவிட்டது என்றார்.

இவர் சொன்னதை ஆட்சித் தலைவர் புன்னகையுடன் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் முதல் வந்து சேர்ந்தவர் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தார்.

அதன்பின் "உங்களுக்கு எது முக்கியம் ஆளுநரின் பதவியா? கழுதையின் காலா?" என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில் ஆட்சித்தலைவரின் குழந்தைகள் ஓடி வந்து மடியில் உட்கார்ந்து விளையாட ஆரம்பித்தனர். அவர் அந்தக் குழந்தைகளுக்கு அன்பாக முத்தம் கொடுத்தார்.

இதைப்பார்த்ததும் அந்த முதல் நபர் சொன்னார்

"ஐயா.... எனக்குப் பத்துக் குழந்தைகள். இப்ப[illegible]லாம் அருகில் வரமாட்டார்கள். என்னைப் பா[illegible] பயந்து ஒதுங்கிப் போய் விடுவார்கள்"

"அப்படியானால் அவர்களுக்கு முத்தமே கொடுத்தது இல்லையா?"

"இல்லை"

இப்போது அந்த ஆட்சித் தலைவர்

"படைப்புக்கள் மீது கருணை காட்டாதவர் மீது படைப்பாளன் கருணை காட்டமாட்டான்" என்றார்.

அதற்கு "அந்த ஐந்து குழந்தைகள் வீட்டுக்குப் போனால் எல்லோரும் என் மேல் வந்து விழுந்து விளையாடுவார்கள். என் உடை கசங்கி இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம்" என்றார்.

அழகான உடை, இனிமையான பேச்சு, பொலிவான தோற்றம். இதனால் மட்டும் ஒருவர் தலைவராகி விட முடியாது.


கருணை வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் வேண்டும்.

இந்தக் குணங்கள் தாமதமாக வந்த இரண்டாவது நபரிடம் இருப்பதை ஆட்சித்தலைவர் புரிந்து கொண்டார்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் அந்த ஆட்சித் தலைவர், தமது செயலாளரைக் கூப்பிட்டு "இந்த இரண்டாவது நபருக்குப் பதவி நியமனக் கடிதத்தை அனுப்பி வையுங்கள்" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

## இந்திய பேராசிரியருக்கு அமெரிக்காவில் விருது



(ஹூஸ்டன்)

அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவழி பேராசிரியர் அனில்குல் கர்னிக்கு புல்பிரைட் நேரு பெல்லோஷிப் விருது வழங்க அமெரிக்கா தெரிவு செய்துள்ளது.

இவர் இந்தியா முழுவதும் உள்ள மருத்துவ கல்வி நிறுவனங்களில் நோய்த்தடுப்பு ஊட்டச்சத்து, செயற்பாட்டு உணவுகள் குறித்து கற்பித்த அனுபவத்தினைப் பாராட்டி இவ் விருது வழங்கப்படவுள்ளது.

இவர் அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் அறுவை சிகிச்சை துறை பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815,**
**021 567 1532**

# மீனவர்கள் பிரச்சினைக்கு இந்திய மத்திய அரசு தீர்வுகாண வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்து

**(சென்னை) கச்சதீவுக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்திருப்பது கடுமையான அத்துமீறலாகும். இத்தகைய செயலை இனியும் அனுமதிக்கக் கூடாது என பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இவ் விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக மீனவர்கள் தொடர்பான பிரச்சினையில் இலங்கை அரசு இன்னும் திருந்தாமல் தொடர்ந்து நாடகமாடிக் கொண்டிருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

இலங்கை அரசின் இடையூறுகளாலும் அத்துமீறல்களாலும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பாதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களுக்கு நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசு தான் விடிவை ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் பகுதி மீனவர் கள் 29 பேரை இலங்கை இராணுவத்தினர் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு கைது செய்துள்ளனர்.

அதன்பின் நேற்றுமுன்தினம் காலை மேலும் 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அவர்களுக்குச் சொந்தமான 7 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழக மீனவர்களுக்கு எதிரான இந்த அடாவடிச் செயல் கண்டிக்கத்தக்கது.

கச்சத்தீவுக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை இலங்கைக் கடற்படையின்ர் கைது செய்திருப்பது கடுமையான அத்துமீறலாகும். இத்தகைய செயலை இனியும் அனுமதிக்கக் கூடாது.

வங்கக் கடலில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கைக் கட்றபடையினர் கைது செய்வதும், துப்பாக்கியால் சுடுவதும் தாக்குவதும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்கின்றன.

இதுவரை 600இற்கும் அதிகமான தமிழக மீனவர்கள் நடுக்கடலில் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளனர்.

மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமைந்த பின்னர் மீனவர்கள் மீதான இலங்கை இராணுவத்தினரின் அத்துமீறல்லுயும் என்று எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப் பின்பும் தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் கைது செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

எனவே, கைது செய்யப்பட்ட 33 மீனவர்களையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவும் மத்திய அரசு முன்வர வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் தீவிரவாதிகளின் தாக்குதலில் 15 பேர் உயிரிழப்பு

(கானோ)

நைஜீரியாவில் 4 கிராமங்களில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து அந்த கிராம வாசிகள் கூறியதாவது,

நைஜீரியாவின் வடகிழக்கில் கேமரூன் எல்லையொட்டிய காம்போரு காலா மாவட்டத்தின் நுவாரி, முசாரி, வாலோரி உள்ளிட்ட 4 கிராமங்களில் "போகோ ஹராம்" தீவிரவாதிகள் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர்.

சரக்கு வாகனத்தில் வந்த அந்தத் தீவிரவாதிகளில் பலர் இராணுவ வீரர்களைப்போல் உடை அணிந்திருந்தனர்.

தங்கள் கண்ணில் தென்பட்டவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அப்பாவி பொதுமக்கள் 15 பேர் உயிரிழந்தனர்.

எனினும், பலியானவர்களின் எண்ணிக்கையை உறுதியாக கூற இயலாதபடி முரண்பட்ட தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன.

அந்த தீவிரவாதிகள், கிராம மக்களின் வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டு வாகனத்தில் தப்பிச் சென்றுவிட்டனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் இஸ்லாமிய அரசை நிறுவும் நோக்கில் அரசுக்கு எதிராகப் போராடி வரும் போகோ ஹராம் தீவிரவாதி களால் இந்த ஆண்டில் மட்டும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# சீனாவுடனான நல்லுறவை வலுப்படுத்த இந்தியா விரும்புகிறது - தருண் விஜய்



(சிங்கப்பூர்)

சீனாவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள இந்தியா விரும்புகிறது என்று வெளியுறவுத்துறையின் நாடாளுமன்ற குழுவின் உறுப்பினரும், எம்.பி.யுமான தருண் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் சிங்கப்பூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

ஆசிய பசுபிக் பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டும் பணியில் இந்தியா பங்களிக்க விரும்புகிறது.

சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுடனான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை இந்தியா எடுத்து வருகிறது.

வணிகம், தொழில்துறை, கலாசாரம் மற்றும் இளைஞர்கள் பரிமாற்றம் போன்ற துறைகளில் நாங்கள் முன்னேறிச் செல்ல விரும்புகிறோம்.

இதற்காக சீனா மற்றும் இந்தியா மக்களிடையே தொடர்பை ஏற்படுத்தும் விதமாக ஒரு அமைப்பை உருவாக்கவுள்ளோம்.

ஜப்பான், இந்தியாவின் நட்பு நாடாக எப்பொழுதும் விளங்குகிறது என்றார்.

# தலிபான்கள் விடுவிக்கப்பட்டது அமைதி பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்கும்

## ஆப்கான் அமைதிக்குழு தெரிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க வீரர் விடுவிக்கப்பட்டதற்கு பதிலாக, 5 தலிபான் முக்கிய தலைவர்களை அமெரிக்கா விடுவித்துள்ளது.

இது இருதரப்பினர் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க உதவும் என்று ஆப்கான் அமைதிக்குழு உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள பக்திகா மாகாணத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பாதுகாப்புப் பணியிலிருந்த அமெரிக்காவின் இதாஹோ பகுதி இராணுவ வீரரான போவே பெர்கடால், தலிபான்களால் கடத்தப்பட்டார்.

இந்நிலையில் இவர் கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட்டார்.

அதற்குப் பதிலாக கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டைக்கோபுர தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு, குவாண்டனாமோ பே இராணுவச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 5 தலிபான்களை அமெரிக்கா விடுவித்துள்ளது.

இது குறித்து ஆப்கான் அமைதிக குழுவைச் சேர்ந்த அதிகாரியான இஸ்மாயில் காசிம்யார் கூறியதாவதாவது,

ஆப்கான் அரசு, அமெரிக்காவிடம பலமுறை பேசி, தலிபான்களை விடுவிக்கச் செய்துள்ளது.

இந்த நடவடிக்கை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஆப்கான் அரசு விரும்புவதை காட்டுகிறது.

கடந்த 10 மாதங்களுக்கு முன்னதாகவே தலிபான் தலைவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து, குவாண்டனாமோ சிறை அதிகாரிகளிடம கேட்கப்பட்டது என்று இஸ்மாயில காசிம்யார் தெரிவித்துள்ளார்.



தலைநகர் புதுடில்லியில் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட எதிரணிக் கட்சிகளுடன் பேசுவோம்

## மங்கள எம்.பி.தெரிவிப்பு



**நாட்டில் ஆட்சி மாற்றத்திற்கான தேவை ஏற்பட்டு விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தினை சரியாக பயன் படுத்தி மீண்டுமொருமுறை ஆட்சியை அமைப் போம். கூட்டுக் கட்சிகளின் தேவை ஏற்படுமெனின் அனைத்து எதிரணிகளுடனும் பேசுவோம் என ஐ.தே. கட்சி தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க. தனித்து போட்டியிடுகின்றமையின் சாத்தியம் தொடர்பில் வினவிய போது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

17ஆவது திருத்தச் சட்டத்தினை மீண்டும் நிலைநாட்ட வேண்டிய தேவை உள்ளது. ஜனநாயகத்தை நிலை நாட்டுவதே எமது பிரதான நோக்கம்.

நாட்டில் மக்கள் தற்போது ஆட்சி மாற்றமொன்றினை எதிர்பார்க்கின்றனர். பொருளாதார அரசியல் கலாசாரம் என அனைத்து வழிகளிலும் மக்கள் அதிருப்திகளை கண்டு விட்டனர். பாதுகாப்பு அற்ற ஓர் வாழ்க்கைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, ஆட்சி மாற்றமொன்றினை ஏற்படுத்த வேண்டிய அவசியமும் அவசரமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தினை ஐக்கிய தேசியக் கட்சி சரியாக பயன்படுத்தும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து வலுவானதொரு ஆட்சியினை அமைக்க வேண்டிய கடமையும் எமக்கு உள்ளது. எனவே அதற்கான வாய்ப்பினை இப்போது ஏற்படுத்தி மீண்டும் ஒருமுறை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியினை அமைப்போம்.

அதேபோல் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்தே போட்டியிடும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

எனினும் ஏனைய எதிர்க்கட்சிக ளின் ஆதரவு கிடைக்குமாயின் எம்மை இன்னும் வலுப்படுத்திக் கொள்ள முடியும். மக்கள் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதர வினை நாடி நிற்கின்றனர் என்றார். (2)

# புலிச் சந்தேக நபர்கள் முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்

## புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு

மலேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட மூன்று விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களிடம் இருந்து பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிரூட்டும் வகையில் புலம்பெயர் தமிழர்களின் உதவியுடன் மலேசியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய நடவடிக்கைகளுடன் வடக்கின் தமிழ் அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர்களின் தொடர்பு பற்றிய விபரங்களை கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்கள் வெளிப்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சந்தேக நபர்களிடம் இருந்து பெறப்பட்ட டி.வீ.டி காணொளி மூலம் இந்த இரகசியம் அம்பலமாகியுள்ளதாக பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூன்று முக்கிய புலி உறுப்பினர்கள் மலேசியாவில் மறைந்து இருப்பதாகவும் அவர்களை கைது செய்ய சர்வதேச பொலிஸார் மூலமாக சிவப்பு அறிக்கை பிடிவிறாந்தை பிறப்பிக்க புலனாய்வுப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

2007 ஆம் ஆண்டு முதல் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சர்வதேச வங்கி கணக்கின் மூலம் வெளிநாடுகளுக்கு சென்ற புலிகளின் உறுப்பினர் வாழ்ந்து வந்த விதம் பற்றியும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

மலேசியாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்துள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அங்கிருந்து தமது அமைப்பிற்கு உயிரூட்டும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (2)

# நவீன உலகில் வாழ்ந்தாலும் குணாதிசயங்கள் மாறவில்லை

## அமைச்சர் குரே கிண்டல்

இலங்கையில் இருப்பவர்கள் குணாதிசயங்களின் அடிப்படையில் பரிணாம வளர்ச்சியடையாத குரங்குகள் என சிறு ஏற்றுமதி பயிர்கள் தொடர்பான அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்த நவீன அறிவு பூரணமான உலகத்தில் நாம் வாழ்கின்றோம். நாம் ஆடம்பர உணவுகளை உண்கின்றோம், ஆடம்பர வாகனங்களில் பயணம் செய்கின்றோம். ஆடம்பர உடைகளை அணிகின்றோம். சன் கிளாஸ்களை அணிகின்றோம்.

நவீன நாகரிகம் எம்மை கடந்து செல்கிறது. என்ன செய்தாலும் குணாதிசயங்களின் அடிப்படையில், நாம் இன்னும் காடுகளில் வாழ்கின்றோம்.

பரிணாம வளர்ச்சியடைந்த குரங்கில் இருந்துதான் மனிதன் தோன்றினான். தாடிகளை மழித்து தலைமுடியை வெட்டி எப்படியான நாகரிகமாக இருந்தாலும் மனிதர்களிடம் சிறந்த குணாதிசயங்கள் இல்லாமல் போய்விட்டன.

அப்படி பார்க்கும் போது குணாதிசயங்களின் அடிப்படையில், இலங்கையில் இன்னும் பரிணாம வளர்ச்சியடையாத குரங்குகளே இருக்கின்றன எனவும் அமைச்சர் குரே குறிப்பிட்டுள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### குமாரசாமி திருநாவுக்கரசு



யாழ். கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி திருநாவுக்கரசு கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 2 Rue des Peres Camilliens,94360 Bry-Sur-Marne, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி சபாரத்தினம் இராசம்மா



யாழ். நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் இராசம்மா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நீர்வேலியில் நடைபெறும்.

### இராமநாதர் மகாலிங்கம்



யாழ்.புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதர் மகாலிங்கம் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் புங்குடுதீவு மணல்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### ளளளசரவணை இராஜேந்திரம்



யாழ்.உடுப்பிட்டி இலந்தைக் காட்டைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை இராஜேந்திரம் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு Urgel Bourgie Ltee,3955 de la cote-de - Liesse,Saint- Laurent, Qc H4N 2N6, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.

### சபாபதி தியாகராசா



ஆலங்குளம் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி தியாகராசா (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் பெருந்தெருக்கள் திணைக்களம்) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அராலி புனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சுப்பிரமணியம் சபாரத்தினம்



கொழும்புத்துறை சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சபாரத்தினம் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி கந்தையா அன்னம்மா



செபஸ்ரியன் வீதி, ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட கந்தையா அன்னம்மா கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஓட்டுமடம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### செல்லையா சங்கரலிங்கம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சங்கரலிங்கம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தக னம் செய்யப்படும்.

### ஞானரத்தினம் டேவிட் ஜெயரத்தினம்



யாழ். கொக்குவிலை பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானரத்தினம் டேவிட் ஜெயரத்தினம் (இளைப்பாறிய பொறியியலாளர்) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு [illegible] ஏழாலை தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் C.A.C.M ஏழாலை தெற்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவிப்புலன் அற்றோருக்கு சிகிச்சையும் கருவி வழங்கலும்

வவுனியா பொது வைத்தியசாலையில் செவிப்புலன் அற்றோருக்கான இருநாட்கள் சிகிச்சையளிக்கப்பட்டு செவிப்புலன் கேள் கருவி வழங்கும் நிகழ்வு நாளை புதன் கிழமையும் மறுநாள் வியாழக் கிழமையும் இடம்பெறவுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் செவிப்புலன் கருவிகள் தேவையுடையோருக்கு இலவசமாக கருவிகளையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இச்சிகிச்சையினையும் கருவியினையும் பெற விரும்புபவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையின் காது, தொண்டை தொடர்பான சிகிச்சை நிலையத்தில் தமது பெயர் விபரங்களை உடன் பதிவு செய்து கொள்ளும் பட்சத்தில் சிகிச்சையினை இலகுவாக பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-250)

# ஆறுமுகம் திட்டத்தை எதிர்த்து இணைத்தலைவர்களுக்கு மகஜர்



(புளியம்பொக்கணை)

இரணைமடு குடிநீர்த் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக ஆனையிறவு கிழக்குப் பகுதி கடனீரேரியை நன்னீர் ஆக்கும் ஆறுமுகம் திட்டத்தை எதிர்த்து கடற்றொழிலாளர்கள் சார்பாக கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் கு.அருமைராசா மகஜர் ஒன்றை கிளிநொச்சிமாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களிடம்கையளித்துள்ளார்.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது,

இரணைமடு குடிநீர்த் திட்டத்துக்கு மாற்றுத் திட்டமாக ஆனையிறவு கிழக்குப் பகுதி கடனீரேரியை நன்னீர் ஆக்கும் ஆறுமுகம் திட்டத்தை பரிசீலிக்கலாம் என்று இரணைமடு குளத்தின் கீழுள்ள சில கமக்காரர் அமைப்புக்களும்வட மாகாணசபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு அறிக்கையும்பரிந்துரைத்துள்ளதாக அறிகிறோம்.

இத்திட்டத்தினூடாக ஆனையிறவுக் கடனீரேரியின் மீன்பிடி, இறால் பிடி ஆகியவற்றில் ஈடுபடும் 2 ஆயிரம் வரையான மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அபாயம் ஏற் பட்டுள்ளது.

இந்தக் கடனீரேரியின் இரண்டு பக்கங்களிலும் உள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த 2ஆயிரம் வரையான உறுப்பினர்கள் கடற்றொழில் சங்கங்களில் தொழில் உரிமத்தைப் பெற்று மீன் மற்றும் இறால் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மீனவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து இவர்களுடைய நலன்களை மேம்படுத்தும் வகையில் 12 கடற்றொழிலாளர் சங்கங்களும் செயற்பட்டு வருகின்றன. இச் சங்கங்களை ஒருங்கிணைத்து 3 சமாசங்களும் இயங்குகின்றன. இப்படி ஒரு வளர்ச்சி நிலையில் ஆனையிறவுக் கடனீரேரியின் மீன்பிடி பொருளாதாரம் வாழ்வாதார வலுமிக்கதாக மாறி வருகிறது.

இப்பொழுது மீண்டும் ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நாம் குறிப்பிட்டிருக்கும் கடலேரி மீன்பிடியும் அதனை நம்பி வாழும் மக்களும் அவர்கள் வாழ்கின்ற பிரதேசங்களும் பாதிப்பைச் சந்திக்கும் என்பதைத் தெரியப்படுத்துகிறோம்.

இதேவேளை மேற்குறிப்பிடப்படும் ஆறுமுகம் திட்டமானது கடந்த 60 வருடங்களுக்கு முன்னெடுக்கப்பட்டு உறை நிலையில் வைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

ஆகவே காலத்தால் பழைமையாகி விட்ட ஆறுமுகம் திட்டத்திற்குப் பதிலாக புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தி விவசாயிகளின் நலனையும் மீனவர்களின் நலனையும் பேணக் கூடிய வகையில் திட்டமொன்றை உருவாக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு தரப்பினரின் வாழ்க்கையை முதன்மைப்படுத்தி, இன்னொரு தரப்பினரின் வாழ்க்கையை பொருட்படுத்தாதிருப்பது என்பது சமூக நியாயத்திற்கு ஏற்புடையதல்ல.

ஆறுமுகம் திட்டத்தின் காரணமாக மூடப்பட்ட ஆனையிறவுப் பாலத்தின் மேற்குப் பகுதி இன்று ஆற்றுவண்டல் மண்நிரம்பியநிலையில் கடலேரி சதுப்பு நிலமாக மாறி வருவதுடன் கடலுணவு வளங்களும் அருகி வருகின்றன என்பதை அப்பகுதி மீனவர்கள் வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் இப்பாலத்தை மீளவும் திறக்குமாறு பல் வேறு வேளைகளில் கோரி வருகின்றனர்.

ஆகவே நீதி, நியாயம், நீண்டகாலஅடிப்படையிலானசமூகநலன்கள், பரந்துபட்ட மக்களின் நன்மைகள் என்ற அடிப்படையில் நாம் முன் வைக்கும் கோரிக்கை, ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது விவசாயிகளுக்கோ அல்லது மீனவர்களுக்கோ அல்லது யாழ்.குடாநாட்டின் குடிநீர்த்தேவைக்கோ மிகுந்த பயன் அளிக்கும் திட்டமாக அமையாது என்பதேயாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (9-263)

## சாரணர்களை ஊக்குவிக்குக

இலங்கை சாரணர் சங்கத்தினால் தேசியரீதியாகசாரணர்சேவை மற்றும் மக்கள் தொடர்புகள் வாரம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக் கிழமைமுதல் 22 ஆம் திகதி ஞாயிறு வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எனவே, மக்களிடத்தில் சாரண செயற்பாடுகளை முன்னெடுக்க வரும் சாரணர்களுக்கு அவர்களால் முடிந்தளவுசிறியசிறியவேலைகளைக் கொடுத்து அவர்கள் கொண்டு வரும் அட்டைகளில் அதற்குரிய பணத்தை வேலையின் பெறுமதிக்கேற்ப 50, 100,200,500 ரூபா வரை கொடுத்து உற்சாகப்படுத்துமாறு கிளிநொச்சி உதவி மாவட்ட ஆணையாளர் யோ. கேதீசன் தெரிவித்துள்ளார். (9)

## துணுக்காய் பி.செயலர் பிரிவில் 312 மாற்றுத் திறனாளிகள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியேறிய 11ஆயிரத்து 466 பேரில் 312 பேர் மாற்றுத் திறனாளிகளாகவுள்ளனர் என பிரதேச செயலர் எஸ். குணபாலன் தெரிவித்துள்ளார்.


இவர்களுக்கு சமூக சேவை அமைச்சு திணைக்களத்தினூடாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி வீடுகள் திருத்தம் செய்வதற்காக மூன்று பேருக்கு 75 ஆயிரம் முதல் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வரையும் புதிய வீடு அமைப்பதற்காக 2 பேருக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு மாற்றுத் திறனாளிகளுக்கான மலசல கூடம் அமைக்கும் திட்டத்தினூடாக 2 பேருக்கு தலா40ஆயிரம்ரூபாவழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவை அமைச்சினூடாக மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற உதவு தொகையான 30 ஆயிரம் ரூபா 50 பேருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் 16 பேருக்கு ஊன்று கோல், 6 பேருக்கு சக்கர நாற்காலி, 6 பேருக்கு மூக்குக்கண்ணாடி, 5 பேருக்கு மூன்று சில்லு வண்டிஎன் பணவும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாற்றாற்றல் உடையோருக்கான நலன்புரி அடையாள அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான சங்கம் அமைக்கப்பட்டு 9 சுய தொழில் குழுக்களும் பிரதேச மட்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-15)



பூநகரி பொலிஸ் நிலையத்திற்கான கட்டட வேலைகள் சங்குப்பிட்டி வீதிக்கு அண்மையில் இடம்பெற்று வருகின்றது. நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டடத்தை படத்தில் காணலாம். (படம்:-பூநகரி செய்தியாளர்)

## நீண்டகாலத்தின் பின் பொதுச்சபை கூட்டம்

(கிளிநொச்சி)

நீண்டகாலத்தின் பின்னர் கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவு சங் கத்தின் பொதுச் சபை கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இடப்பெயர்வினையடுத்து 5 வருடங்களின் பின்னர் நடத்தப்பட்ட இக் கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். (9-254)




## கிராம சேவகரின் பணிக்கு இடையூறு; தாயும் மகனும் விளக்கமறியலில்

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் கிராம சேவகரின் பணிக்கு இடையூறு விளைவித்த தாயும் மகனும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு தினங்களுக்கு முன்னர் வவுனியா இறம்பைக்குளம் பகுதியில், பணியில் ஈடுபட்டிருந்த கிராம சேவகரையும் அவருக்கு உதவியாக பணியாற்றிக்கொண்டிருந்த ஒருவரையும் பணியை முன்னெடுக்க முடியாதவாறு அக் கிராமத்தைச் சேர்ந்த தாயொருவரும் அவரது மகனும் இணைந்து இடையூறு விளைவித்தனர் என வவுனியா பொலிஸில் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை கிராம சேவகரினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் தாயும் மகனும் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் விசாரித்த நீதவான், நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதற்கமைய, வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சந்தேக நபர்களை வைத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (9-253)

## வன்னி தொண்டராசிரியர் நியமனத்திற்கு 2006 முதல் சேவைக்காலத்தை கணிக்குக

வன்னிப் பகுதி பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-II இற்குள் உள்ளீர்ப்புச் செய்யும் போது 2006 ஆம் ஆண்டிலிருந்து சேவைக் காலத்தை கணிக்கு மாறு வலியுறுத்தி வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியத்தினால் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் வன்னிப்பகுதி பாடசாலைகளில்14 வருடத்திற்கும்மேலாக கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர் நியமனத்தில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறாக, நாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதையடுத்து நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன் பல தடவைகள் கவனயீர்ப்பு, உண்ணாவிரதம் போராட்டங்களை நடத்தி வந்தோம்.

அச்சந்தர்ப்பங்களில் எம்மை சந்திக்கும் பொறுப்பு வாய்ந்த கல்வி அதிகாரிகளும் அமைச்சர்களும் விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென உறுதிமொழிகளை அளித்திருந்தனர்.

இந்நிலையில், நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதாக தெரிவித்து 2013.07.01 முதல் ஆசிரிய உதவியாளர் எனும் நியமனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார்-மடு, வடமராட்சி கிழக்கு ஆகிய 6 கல்வி வலயங்களையும் சேர்ந்த 514 பேருக்கு வழங்கப்பட்டு 10 ஆயிரம் ரூபா மாத்திரமே சம்பளமாக வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும், இதுவரை நிரந்தர நியமனம்வழங்கப்படவில்லை. தொண்டர் ஆசிரியர்களுக்கு இறுதியாக 2006 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவையின் நிரந்தர ஆசிரியர் நியமனம் ஆசிரியர் சேவை தரம்3-II இல் வழங்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களும் தற்போது நிரந்தர ஆசிரியர் நியமனத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இதனால், 2006 ஆம் ஆண்டு நியமனத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அக்காலப்பகுதியான 2006 இல் இருந்தே ஆசிரியர் சேவைக்காலம் கணிக்கப்பட்டு நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்கவும் இலங்கை ஆசிரியர் சேவைத்தரங்களுள் உள்ளீர்க்கவும் ஆவன செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெற்றியின் இரகசியம் என்று புதிதாக ஒன்றும் இல்லை. அடுத்தவர்களின் திறமையை அவர்கள் கண்ணோட்டத்தில் புரிந்து கொண்டு உதவ வேண்டும்.
– *திருவள்ளுவர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# முதல்வர் நிதியில் இருந்து உதவித்தொகை ......

இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில், செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. வெற்ற வெற்றி என்பது மகத்தானது. அந்த வெற்றி ஒரு மாநிலம் சார் கட்சியை அகில இந்தியாவில் மூன்றாவது சக்தி என்றாக்கியுள்ளது.

இவ்வாறு எக்காலத்திலும் இல்லாத வெற்றியை செல்வி ஜெயலலிதா வெற்றுக்கொள்வதற்குப் பின்னணியாக இருந்தது அவர் முன்னெடுக்கும் நலத்திட்டங்களாகும்.

செல்வி ஜெயலலிதா மேற்கொண்ட நலத்திட்டங்கள், கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.கவை முகவரி இழக்க செய்துவிட்டது.

எந்த அரசு மக்களின் நலன்குறித்து அதீத கவனம் கொள்கிறதோ ; அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றுகிறதோ அந்த அரசை மக்கள் விரும்புவர். இதுவே தமிழகத்தில் நடந்த தேர்தல் சொல்லிநிற்கும் முடிவு.

எனினும் வடக்கு மாகாணத்தில் இன்னமும் மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட வில்லை என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

இதைக் கூறும்போது, வடக்குமாகாண அரசும் தமிழக மாநில அரசும் ஒரே சுதந்திரத்தன்மை உடையவையா? தமிழக அரசிற்கு இருக்கக் கூடிய அதிகாரங்கள் வடக்கு மாகாண சபைக்கு உண்டா? என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே.

தமிழக அரசு அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அந்த அரசிற்கான அதிகாரம் வலுவாக இருக்கிறது. ஆனால் நாங்களோ எதற்கெடுத்தாலும் ஆளுநரிடம் அனுமதி பெறுதல்; மத்திய அரசின் அங்கீகாரம் தேவை என்று இடர் படுகின்றோம்.

அப்படியானால் எங்களால் எதனைச் செய்ய முடியும் என்று யாரேனும் முணுமுணுத்தால், நாம் கூறவந்தது அத்தகையதொரு நிலைமையை அல்ல?

நாம் இங்கு பிரஸ்தாபிப்பதெல்லாம் கலைஞர் கருணாநிதியால் செய்ய முடியாததை செல்வி ஜெயலலிதா செய்கிறாரே அதைத்தான்.

வடக்கு மாகாண அரச அதிகாரம் எங்கள் கைகளில் கிடைத்துள்ளதால் அதன் ஊடாக நாம் முன்னெடுக்கக் கூடிய, மக்கள் நலத்திட்டம் என்ன என்பது பற்றி ஆராய்ந்தோமா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

தமிழகத்தில் வீதி விபத்தில் இறந்தவர், மின்சாரம் தாக்கிப் பலியானவர் என்றவாறாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அனுதாபம் தெரிவிப்பதுடன், அந்தக் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயை ஆறுதல் நிதியாக வழங்குகிறார்.

இந்திய ரூபாய் ஒரு இலட்சம் என்றால் அது எங்கள் நாணயத்தில் இரண்டரை இலட்சம் ரூபாயாக இருக்கும். ஒரு உறுப்பினரை இழந்த குடும்பத்திற்கு ஆறுதல் அளிக்கக் கூடிய உதவியாக இது இருப்பது தமிழக அரசின் ஒரு நல்ல திட்டமாகும்.

இத்தகையதொரு திட்டத்தை வடக்கு மாகாண அரசும் ஆரம்பித்து முதலமைச்சர் நிதியென்ற பெயரில் உதவித்திட்டங்களை மேற்கொண்டால் என்ன என்பதே நம் கேள்வி.

வன்னிப் போரில் உயிரிழந்தவர்களின் விபரங்களைச் சேகரித்து அவர்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அந்தக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்றை முதல்வர் அலுவலகம் ஆரம்பித்தால், அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பேருதவியாக இருக்கும் அல்லவா? ஒரே தடவையில் இந்த உதவியை முன்னெடுப்பது சாத்தியம் இல்லையென்றால், படிப்படியாகவேனும் அந்த உதவியை முதல்வர் நிதியூடாகச் செய்யலாம்.

இதற்கு வெளிநாட்டில் இருக்கக் கூடிய எங்கள் புலம்பெயர் உறவுகளின் நிதி யுதவியையும் பெற்றுக் கொள்ள முடியும் அல்லவா? இது பற்றிச் சிந்திப்பதில்; செயல்படுத்துவதில் கடுமையான அர்ப்பணிப்பும் தியாகமும் தேவையாக இருக்கும்.

இத்தகையதொரு அர்ப்பணிப்பான சேவையைத் தான் பகல் இரவு பாராமல் செல்வி ஜெயலலிதாவும் அவரின் அணியும் செய்து வருகிறது.

# உச்ச கட்டத்தில் நில ஆக்கிரமிப்பு; உதட்டளவில் மீள்குடியேற்றம் - பாஸ்கரா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த நில ஆக்கிரமிப்புக்கு எதிரானபோராட்டத்தில் அரசு நிலவிடுவிப்பு என்பது உதட்டளவிலும், நில ஆக்கிரமிப்பு நிஜமாகவும் நடைபெறுவதாகவும், நல்லிணக்கம் என்பது அரசு கபடத்தனமாக தன் பக்கத்தில் ஒரு பக்கமாகவும் அதே வேளை உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களை கைது செய்வதிலும் நசுக்குவதிலும் முனைப்பாக செயற்படுவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், அரசு தன்னால் தனது இளைப்பாறிய உச்சநீதிமன்ற நீதியரசரால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவால் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்ட ஒன்றே பொதுமக்கள் காணியில் இருந்து படிப்படியாக இராணுவம் விலக வேண்டும், ஆனால் இராணுவம் அதற்கு எதிர்மாறாக மேலும் பொதுமக்கள் காணிகளை சுவீகரிப்பதாகவேயுள்ளது.

அரசு வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திக்கும் போது உடனடியாக மீள்குடியேற்றத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றது. இது அவர்களுடன் சந்திக்கும் உதட்டளவு உத்தரவாதம் மட்டுமே. நடைமுறையில் எள்ளளவும் இல்லை. நில ஆக்கிரமிப்பே நிஜம். அதுவே நடைபெறுகின்றது.

நல்லிணக்கம் என்பது அரசின் சார்பான தனக்கு வசதியான ஒருபக்கமாகவே நடைபெறுவதாக உரையாற்றும் போது குற்றம் சாட்டினார்.

வடமாகாண முதலமைச்சர் தனது சத்தியப் பிரமாணம் முதல் - பல தடவைகள் நல்லிணக்க செய்திகளை சொல்லில் அல்லாமல் செய்தே காட்டியுள்ளார். அரசோ அதனை ஒருபொருட்டாகவே மதிக்காது மேலும் மேலும் முதலமைச்சரின் செயறபாட்டுக்கு இடையூறு செய்கின்றது.

தடை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேலும் இந்தியப்பிரதமர் மோடியின் பதவியேற்புவிழாவிற்கு தனக்கு கவசமாக வடமாகாண முதலமைச்சரை அழைத்தது அரசு கபடத்தன மாக, நல்ல வேளை முதலமைச்சர் செல்லவில்லை. நல்லகாலம் முதலமைச்சர் அரசுக்கு அதில் நல்லெண்ணம் காட்டமுயலவில்லை அவரின் நல்லகாலம்.

இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்த போது மீள்குடியேற்றம் பற்றி நலலிணக்க சந்திப்பில்முதல்பேச்சில் இலங்கை ஜனாதிபதி பேசியவிடயங்கள் இந்திய பிரதமர் செயலகத்தால் மீள்குடியேற்றம் பற்றியும் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியும் வெளியிடப்பட்டது.

மேலும் உரிமைக்காக குரல் கொடுப்பவர்களை கைது செய்வதிலும் அவர்களை மௌனிப்பதிலும் அரசின் கவனம் செல்வது அரசின் கபடத்தன்மையின் உச்சகட்டம் என தெரிவித்தார். (செ-11)

# சுவிஸ் வாழ் இலங்கையர்களின் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனை

(சூரிச்)

சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ள இலங்கையர்களின் விண்ணப்பங்களை மீள் பரிசீலனைக்கு எடுத்து கொள்ள அந் நாட்டு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கையர்கள் தமக்கு சுவிஸ் குடியுரிமையை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனடிப்படையில் ஆயிரத்து 800 விண்ணப்பங்களை மீள் பரிசீலனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுவிஸ் குடியேற்ற விவகாரங்கள் தொடர்பான அலுவலகம் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் விண்ணப்பங்களில் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களுக்குரியவர்களை சுவிஸ் அதிகாரிகள் நாடுகடத்த மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 2 ஆயிரம் இலங்கையர்கள் அரசியல் தஞ்சம் கோரி சுவிட்சர்லாந்து குடியேற்ற விவகாரங்கள் தொடர்பான அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

இலங்கையில் தற்போது நிலவும் அமைதியான சூழ்நிலை காரணமாக அந்த விண்ணப்பங்களை நிராகரிக்க சுவிட்சர்லாந்து அரசாங்கம் முயற்சித்து வந்தது.

எனினும் புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கையை அடுத்து விண்ணப்பங்களை நிராகரிப்பதை அதிகாரிகள் நிறுத்தி வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

# மக்களின் விருப்பங்களை நிறைவு செய்வதே எனது அரசின் கடமை

## பாரதப் பிரதமர் மோடி தெரிவிப்பு

(கொழும்பு)

தனது பதவியேற்பு விழாவுக்கு சார்க் நாடுகளின் தலைவர்களை அழைத்தது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக டில்லியில் உள்ள பா.ஜ.க தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த மோடி, அங்கு கூடியிருந்த கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் உள்ளிட்ட நிர்வாகி கள் மற்றும் தொண்டர்களிடையே உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றியுள்ள மோடி, மக்கள் எனது அரசிடம் நிறைய எதிர்பார்க்கின்றனர்.

அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது எனது அரசின் கடமை. நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டியது அவசியம்.

அதன் விளைவாக, இந்தியாவுக்கான மரியாதையையும் அந்தஸ்தையும் உலகம் அளிக்கும்.

எனது பதவியேற்பு விழாவுக்கு சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தேன். இதன் மூலம் ஒட்டுமொத்த உலகுக்கும் ஒரு தகவலை அளித்தோம்.

இது எப்படி நடந்தது என்று உலக நாடுகள் அதுகுறித்து இன்னமும் பேசி வருகின்றன.

சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட ஒரு சரியான முடிவு எவ்வளவு திறன் வாய்ந்ததாக இருக்கும் என்பதையே இது காட்டுகிறது.

காங்கிரஸ் கட்சியின் மோசமான ஆட்சி காரணமாக மக்கள் நீண்ட காலமாக அதிருப்தி அடைந்திருந்தனர்.

இந்நிலையில், மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய கூடுதல் பொறுப்பு எனது அரசுக்கு இருக்கிறது என பிரதமர் நரேந்திர மோடி கூறினார். (2)

**நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய இரண்டாம் திருவிழா இன்று**

**நீராவிக் குளக்கரையான் திருநாள் இரண்டு சாலி வாகனத் திருக்காட்சி**



மஞ்சட் பெருச்சாளியமர்ந்து
மல்லிகையின் மாலைசூடி
திங்களணி சிரசிலேற்றி நாரணியை
யிடத்தணைத்து
தேவாசுரர்களுடன் திசைகளையும்
படைத்திட்ட
ஆதி மஹா கணபதியாய்
வருகின்றான்! இன்று
*கஜவதனகுஹராஜனார்*

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## நல்லவனாய் மாறிவிடு



- சுதந்திரம் பிறருக்குத் துன்பம் தருவதாக இருந்தால், அதை சுதந்திரம் என்று சொல்ல முடியாது.
- நீங்கள் நல்லவனாக இருக்கிறீர்கள். இன்னும் நல்லவனாக முயற்சி செய்யுங்கள்.
- தாங்கள் ஏற்றுக் கொள்ளாத விடயத்தைப் பற்றி குறை கூறுபவர்கள், அறிந்தோ அறியாமலோ பொய் சொல்கிறார்கள்.
- பயத்தில் இருந்தே பக்தி ஆரம்பித்தது. பயம் கொள்வதே ஞானத்தின் ஆரம்பம். கடவுள் மீது பூரண அன்பு உண்டாகும்போது, பயம் நீங்கி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.பி.எல். கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## தெல்லிப்பழை யூனியனை வீழ்த்தியது திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.



பருவகாலம் 2 இற்கான ஜே.பி.எல். போட்டிகளில் சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி வெற்றி பெற்றது.

இப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியும் திருநெல் வேலி வை.எம்.எச். ஏ அணியும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி முதலில் களத்தடுப்பாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய தெல்லிப்பழை யூனியன் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைக் குவித்தது. இதில் சதீஷ்கண்ணா 39 ஓட்டங்களையும் ஜான்சன் 18 ஓட்டங்களையும் பிரசாந்தன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி சார்பாக பிரபவன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் விதுன் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சுரேந்தர் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 139 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி 13.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அஷோக் 63 (34), லவகாந்த் 54 (35) ஓட்டங்களையும் கோகுலன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக பந்து வீச்சில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணியின் பிரபவன் தெரிவானார். (சு-23)

## அரியாலை மத்தியை வென்றது சென்றலைட்ஸ் வி.கழகம்



பருவகாலம் 2 இற்கான ஜே.பி.எல் போட்டிகளில் சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்றது.

இப் போட்டியில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணியும் சென்றலைட்ஸ் அணியும் மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி முதலில் துடுப்பாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய சென்றலைட்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் வதுசணன் 34 ஓட்டங்களையும் ஜேம்ஸ் 66 ஓட்டங்களையும் ஷெல்டன் 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெருஷன் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் லிநோர்த்தன் மற்றும் நிலோசன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 204 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் கிருபாகரன் 36 ஓட்டங்களையும் விசாகன் 14 ஓட்டங்களையும் கவஷ்கர் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்து வீச்சில் வதுஷணன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கிசாந்தன், கோகுலன், ஜெரிக் துஷன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக 34 ஓட்டங்களைப் பெற்றதோடு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றிய சென்றலைட்ஸ் அணியின் வதுஷணன் தெரிவானார். (சு-23)

# இன்றைய போட்டி

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவை சுடர் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. அதனை தொடர்ந்து பிற்பகல் 4.30 மணிக்கு நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (சு-19)



மாவட்ட மட்ட உடற் பயிற்சி போட்டிகள் அண்மையில் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலா மிடத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. இதில் வெற்றி பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியினரையும் அதிபர், ஆசிரியர், பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம்.

## அமரர் யோ.நிஜாந்தன் சவால் கிண்ண மென்பந்தாட்ட போட்டி முடிவுகள்

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்,

1.கைதடி சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து 7 ஸ்ரார் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது. இதில் கைதடி சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

2.சாவகச்சேரி வருத்தப்படாத வாலிபர் சங்கத்தை எதிர்த்து விக்பூட்- A விளையாட்டுக் கழகம் களமிறங்கியது. இதில் விக்பூட்- A விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

3.மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கதிரொளி-B விளையாட்டுக் கழகம் களமிறங்கியது. இதில் மட்டுவில் வளர்மதிவிளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

4.குமரநகர் -A விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விக்பூட்- B விளையாட்டுக்கழகம் களமிறங்கியது. இதில் குமரநகர் -A விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

5. அம்பிகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கதிரொளி-A விளையாட்டுக்கழகம் களமிறங்கியது. இதில் அம்பிகை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

6.விவசாய அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி-B விளையாட்டுக்கழகம் களமிறங்கியது. இதில் விவசாய அணி வெற்றி பெற்றது. (கு)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

(பூநகரி)

தம்பிராய் அண்ணா விளையாட்டுக்கழகம் இவ்வாண்டுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை எதிர்வரும் 13, 14, 15 ஆம் திகதிகளில் 4 ஆம் கட்டை பொது விளையாட்டு மைதானத்தில் நடத்த உள்ளதாக விளையாட்டுக்குழுத் தலைவர் ப.ஸ்ரீபன் அறிவித்துள்ளார்.

இப் போட்டியில் பங்குபற்ற உள்ள கிளி.மாவட்ட உதைபந்தாட்ட கழகங்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (சு-84)





சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை 15 வயதுப் பிரிவு கபடி அணி தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது. வரலாற்றில் முதன்முதலாக இப் பாடசாலை அணி மாகாண மட்டத்தை கடந்துள்ள சந்தர்ப்பம் இதுவாகும். வெற்றிக்கு காரணமான வீரர்கள் அழைத்து வரப்படுவதையும் வெற்றி பெற்ற அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குஷியில் குத்தாட்டம் போட்ட ஷாருக்கான்



ஐ.பி.எல் இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணி கிண்ணம் வென்றதைத் தொடர்ந்து அதன் உரிமையாளர் ஷாருக்கான் உற்சாகததில துள்ளிக் குதித்து நடனம் ஆடினார்.

பெங்களூர் சின்னச்சாமி அரங்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல். இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணிபஞ்சாப அணியை வென்று கிண்ணத்தை இரண்டாவது முறையாக கைப்பற்றி அசத்தியது.

இந்த வெற்றிகுறித்து பேசிய கொல்கத்தா அணியின் உரிமையாளர் ஷாருக்கான், மகத்தான இந்த வெற்றியை எனக்கு பெற்று தந்த கம்பீர் மற்றும் அவரது குழுவினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெற்றிக் கிண்ணத்தை எனது இளைய மகன் அப்ரமுக்கு பரிசாக அளிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும் தனது உற்சாகத்தை வெளிப்படுத்தும் வண்ணம் மைதானத்தில் அவர் நடித்த படத்தின் பாடலுக்கு நடனம் ஆடி வெற்றியைக் கொண்டாடினார். (க)

# கொல்கத்தாவுக்கு கிண்ண ஷாருக்கானுக்கு ‘மீன் வறுவ

ஐ.பி.எல் 7-வது தொடரில் கொல்கத்தா அணியின் வெற்றிக்கு முன் மம்தா பானர்ஜியை சந்தித்த ஷாருக்கான் அவரது வீட்டில் மீன் வறுவல் சாப்பிட்டுள்ளார்.

ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா அணியின் உரிமையாளராக இந்தய நடிகர் ஷாருக்கான் இருக்கிறார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் பஞ்சாம் அணியை வீழ்த்தி கொல்கத்தா அணி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டிக்கு முன்பு ஷாருக், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி வீட்டுக்கு சென்று அவரை சந்தித்து பேசினார். அப்போது ஷாருக்கானுக்கு இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணி வெற்றி பெற மம்தா வாழ்த்து கூறியுள்ளார்.



மேலும் பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்ட வறுவல் மீனை சாப்பிடக் கொடுத்துள்ளார். இந்த விருநது குறித்து ஷாருக்கான் டுவிட்டரில் கூறுகையில், மம்தா பானர்ஜி வீட்டில் மீன்வறுவல் சாப்பிட்டது இனிமையாக இருந்தது என்று கூறியுள்ளார். (க)

# வீரர்கள் கூட்டு முயற்சி வெற்றிக்கு காரணம் : கம்பீர்

ஐ.பி.எல் கிண்ணத்தை கைப்பற்றியதற்கு வீரர்களின் கூட்டு முயற்சிதான் காரணம் என்று கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் கூறியுள்ளார்.

2012ஆம் ஆண்டு ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றிருந்த கொல்கத்தா அணி தற்போது பஞ்சாப்பை வீழ்த்தி 2 ஆவது முறையாக சம்பியன் பட்டம் பெற்றது.

தோனி தலைமையிலான் சென்னை அணிதான் இதுவரை இரண்டு ஐ.பி.எல் கிண்ணத்தை வென்றிருந்தது. ஆனால் தற்போது அந்த வரிசையில் கொல்கத்தா அணி இணைந்து கொண்டது.





இந்த வெற்றி குறித்து கம்பீர் கூறுகையில், முதல் 7 ஆட்டத்தில் 5 தோல்வி பெற்றிருந்தோம் இதைத தொடர்ந்து கொல்கத்தா அணியின் கதை முடிந்து விட்டது என்று சொல்லப்பட்டது.

ஆனால் தற்போது எங்களை விமர்சித்தவர்களுக்கு நாங்கள் சரியான பதிலடி கொடுத்து திறமையை நிரூபித்திருக்கிறோம். வீரர்களின் கூட்டு முயற்சியால் ஐ.பி.எல். கிண்ணத்தை 2ஆவது முறையாக கைப்பற்றியுள்ளோம்.

நெருக்கடியில் எங்கள் வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடினார்கள். மனிஷ் பாண்டேயின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது.

மேலும் யூசுப் பதான் தனக்குரிய பாணியில் நன்றாக ஆடினார். இதே போல கடைசியில் வெற்றிக்கு பங்கு வகித்த பியூஸ் சாவ்லாவும் சிறப்பாக ஆடினார் என்று கூறியுள்ளார். (க)

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் காலிறுதிக்குள் ஷரபோவா



பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டியின் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரை தோற்கடித்து காலிறுதிக்குள் நுழைந்தார்.

தொடக்கத்தில் ஸ்டோசர் சிறப்பாக விளையாடினாலும் பின்னர் சுதாரித்த ஷரபோவா சிறப்பாக விளையாடி வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தார். முதல் செட்டை 3 : 6 என்ற கணக்கில் கைப்பற்றிய ஸ்டோசர், இரண்டாவது செட்டிலும் 4 : 3 என்ற செட் கணக்கில் முன்னிலையில் இருந்தபோது தனது திறமையான சர்வீஸ்களால் ஆட்டத்தை தனது பக்கமாக திருப்பினார் ஷரபோவா.

அதிரடியாக விளையாடி 2 வது செட்டை 6:4 என்ற கணக்கில் வெற்றி பெற்ற ஷரபோவா, 3 ஆவது செட்டையும் 6:0 என்ற கணக்கில்எளி தில் கைப்பற்றினார்.

காலிறுதியில் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த கர்பைன்முகுருசாவை எதிர்த்து ஷரபோவா விளையாட உள்ளார். (க)

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் ஜோகோவிச் தகுதி



பிரஞ் ஓபன் டென்னிஸ் போட்டியின் கால் இறுதிக்கு இரண் டாம், நிலை வீரர் ஜோகோவிச் (செர்பியா) தகுதி பெற்றார்.

அவர் 6:1, 6:4, 6:1 என்ற நேர் செட் கணக்கில் சோங்காவை (பிரான்ஸ்) 4 ஆவது சுற்றில் வீழ்த்தினார். மற்ற ஆட்டங்களில் பெர்டிச் (செக்குடியரசு), ரோஸ்னிக் (கனடா) வென்றனர்.

பெண்கள் பிரிவில் 8ஆம் நிலை வீராங்கனை கெர்பர் (ஜேர்மனி) அதிர்ச்சிகரமாக தோற்றார். (க)

# சேனாநாயக்கவின் பந்துவீச்சு சந்தேகத்திற்குரியது – ஐ.சி.சி

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சச்சித்ர சேனாநாயக்கவின்' பந்துவீச்சு முறைமை சந்தேகத்திற்குரியது என சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இங்கிலாந்துடன் இடம்பெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியின் நடுவர்கள் மற்றும் போட்டி மத்தியஸ்தர் ஆகியோர் முறையிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதிக்குள் சச்சித்ர சேனாநாயக்க சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சோதனைகளுக்கு சமுகமளிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த தகவல் அதிர்ச்சியளிப்பதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவிக்கிறது. இருப்பினும் இன்று



நடைபெறும் கடைசி ஒருநாள் போட்டியில் சச்சித்ர சேனாநாயக்க பங்கேற்பார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது. (க)

## உதைபந்தாட்ட போட்டி

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியை நடத்திவருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டியில் மணற்காடு சென் அன்ரனிசும் அல்வாய் நக்கீரன் அணியும் மோதின.

இப் போட்டியில் மணற்காடு சென் அன்ரனிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் உடுத்துறை செந்தமிழ் அணியும் விண்மீன் B அணியும் மோதின.

இப்போட்டியில் உடுத்துறை செந்தமிழ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மைகளை...

...இந்திய வெளிவிவகார செயலா... இந்திய அரசின் பேச்சாளருமான ...றிட் அக்பருதீன் வெளியிட்டுள்ள அறி...கையில் கூறியுள்ளாார்.

இலங்கை அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் இந்திய பிரதமருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றிய முழு விபரங்களை வெளியிடவில்லை என்றாலும் ஜனாதிபதியுடன் மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட யாழ்.மாநகர மேயர் யோகேஸ்வரி, 13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடியதாகவும் இதன் போது மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழுங்குவது ப்ரிசீலிக்க ஜனாதிபதி மகிந்த இணங்கியதாகவும் இந்திய தொலைக்காட்சி ஒன்று தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மோடி-ஜெயா...

தமர் சந்திப்பில் பிரதான அம்சமாக இலங்கைத்தமிழர் விவகாரமே பேசப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கச்சதீவை இந்திய அரசு மீளப்பெற்றுத் தனது உரிமையை நிலைநிறுத்துமானால் அங்கிருந்தபடியே இந்திய மீனவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை இந்தியத் தரப்பு உறுதிப்படுத்த முடியும் என்பதையும் கச்சதீவை இந்தியா, இலங்கைக்குத் தாரைவார்த்தமை இந்தியச் சட்டங்களுக்கு முரணானது என்பதால் அதனை மீட்டு தனது உரிமையை இந்தியா நிலைநாட்டுவது நியாயமானது என்பதையும் தமிழக முதல்வர் இந்திய பிரதமருக்கு இன்று நேரில் எடுத்துரைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-11)

# யாழில் வேவு...

தெரிவிக்கப்படவில்லை.

விடுதி நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட தகவலையடுத்தே இது மீட்கப்பட்டதாக மேலும் தெரியவருகின்றது. வேவு நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த குறித்த வேவு விமானம் செயலிழந்து கீழே வீழ்ந்திருக்கலாமென நம்பப்படுகின்றது. தயாரிப்பு வகைகள் அடிப்படையில் இது சீன நாட்டினதாக இருக்கலாமென மற்றொரு தகவல் கூறுகின்றது. மேலதிக தகவல்களிற்காக இலங்கை விமானப் படையினது உதவி நாடப்பட்டுள்ளதாகவும் இதன் பின்னரே இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிய முடியும் எனவும் கூறப்படுகின்றது (செ-11)

# 13 பேரது...

றும் ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு நிபுணர்கள் பத்து மாத கால அடிப்படையில் விசாரணைக் குழுவிற்கு தேவையான ஆலோசனை வழிகாட்டல்களை வழுங்க உள்ளனர். சர்வதேச ரீதியில் மிகவும் முக்கியமான ஓர் அதிகாரி இந்தக் குழுவினை வழி நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் கொபி அனான் இந்தக் குழுவிற்கு தலைமை தாங்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்டவிரோத கடத்தல்கள், கொலைகள் மறறும் சித்திரவதைகள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. எதிர்வரும் பத்து நாட்களுக்குள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை குறித்த விசாரணைக்குழுவினை அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.(செ-11)

# ஆக்கிரமிப்பு...

மலை பகுதியில் மூன்று இடங்களில் பாரிய அளவில் கருங்கல் தோண்டுதலும், மணல் அகழ்தலும் இடம்பெற்று வருவதனால், இங்கு கற்களை உடைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வெடிகளினால் ஏற்படும் நில அதிர்வு காரணமாக அயலில் உள்ள கிராமங்களின் வீட்டுச் சுவர்கள் வெடிப்பேறபட்டு வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்ப்பட்டிருப்பதாகப் பொதுமக்கள் முறையிட்டிருந்தனர்.

இந்த இடங்களைப் பார்வையிட்ட முதலமைச்சரிடம் சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகள் பலரும், இங்குள்ள நிலைமைகள் குறித்து விளக்கமளித்தனர்.

எனினும் முறையான நிர்வாக நடவடிக்கைகளுக்கு மாறாக அரசியல் செல்வாக்கின் மூலம் இங்கு காரியங்கள் நடைபெறுவதாக முதலமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

ஒட்டுசுட்டான் மற்றும் கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் கல்வி மற்றும் சுகாதாரத்துறையின் மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் சகிதம் பொதுமக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த முதலமைச்சர், மாகாண சபையைக் கொண்டு நடத்துவதில் பல முட்டுகட்டைகள் ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார். இருப்பினும் மக்களின் பிரச்சினைகளுக்கு முடிந்த அளவில் விரைவாக தீர்வு காணப்படும் என உறுதியளித்தார்.

மீள்குடியேற்றத்திற்கான காணிகள் இல்லாதிருப்பது, பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருப்பது, இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களில் அடாவடியாக புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருப்பது, இந்திய வீட்டுத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கிடைக்காதிருப்பது, விவசாய நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், குடிநீர் இல்லாமை, தமிழர்களுக்குச் சொந்தமான மீன்பிடிக்கும் இடங்களில் பெரும்பான்மை இன மக்கள் நாயாறு கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் ஆகிய இடங்களில் ஆக்கிரமித்திருப்பது உள்ளிட்ட பல பிரச்சினைகள் முதலமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டன.

கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்துக்கான தமது கடலையும், தமது விவசாய நிலங்களையும் மீளப்பெற்றுத் தருமாறு கண்ணீருடன் கைகூப்பி முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். (செ-6,11)


## அந்தணச் சிவாச்சாரியார் உடன் தேவை

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலயத்தில் தங்கியிருந்து பூசை வழிபாடுகளை ஆற்றக் கூடிய அந்தணச் சிவாச்சாரியார் தேவை.

குருக்களுக்கு முன்னுரிமை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-0776384031

(இ)

## பதவி வெற்றிடங்கள்

சர்வதேச ரீதியாக இயங்கி வரும் optimo நிறுவன யாழ்ப்பாண மற்றும் வட மாகாண கிளைகளுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன.

- Administration
- Asst. Manager
- Supervisor
- Cordinator



தகைமை O/L மட்டும் போதுமானது. நேர்முகத்தேர்வில் தெரிவுசெய்யப்படும் முதல் 25 நபர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.

(6561)

இறுதித் திகதி 10.06.2014

மேலதிக விபரங்களுக்கு:-
0776219536,07719089...


# கத்தி...

மணியளவில் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான நாகதேவன் குமார்(வயது 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கந்தையா வசீகரன் (வயது 23) என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவர்கள் மீது கத்திக்குத்து மேற்கொண்ட நபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் இவரை தாம் தேடிவருகின்றோம்எனவும்முள்ளிவளைப் பொலிஸார் தெரிவித்தனர். குடும்பத்தகராறு கார ணமாக ஏற்பட்ட மோதலே கத்திக்குத்துக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-11)

# இராணுவத்தினரின்...

இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது ஊருக்கு திரும்பிய போது 11 குடும்பத்தை சேர்ந்தவர்களின் காணிகளை ஒன்றாக்கி இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர்.

அதில் நான்கு குடும்பத்தின் வீடுகள் உள்ளடங்கலாக 7 ஏக்கர் காணிகளில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர்.

கடந்த ஆண்டு ஒரு குடும்பத்தின் வீட்டினை மட்டும் கையளித்தனர். அவர்களின் வீட்டுடன் இணைந்த காணியை இராணுவ பயன்பாட்டிற்காக வைத்திருந்தனர்.

ஏனைய வீட்டு உரிமையாளர்களுக்கு வீட்டுக்கான வாடகையை தருவதாக இராணுவத்தினர் கூறி இருந்தனர். நாம் வாடகை வாங்குவதற்கு சம்மதிக்கவில்லை. வீட்டை கையளிக்குமாறே கோரி இருந்தோம் என்றனர் பாதிக்கபபட்ட மக்கள்.

இந்த நிலையில் கடந்த 20-ம் திகதி இராணுவ தேவைக்காக காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாகவும், அதற்கான காணி அளவீடு செய்யும் பணிகள் யூன் 2-ம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நிலஅளவை திணைக்களத்தால் காணி உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம் நேற்று காலை நில அளவை திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் காணி அளவீடு செய்யும் பணிக்காக வந்திருந்தார்கள்.

நாம் எமது காணியை அளவீடு செய்ய அனுமதிக்க மாட்டோம் என-எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து அவர்கள் அனைவரும் திரும்பி சென்றனர் என்றும் இவ்வாறு இராணுவ பயனபாட்டிற்காக சுவீகரிக்கப்படவுள்ள காணிகளில ஜே/ 309 கிராமசேவையாளரின் காணியும் உள்ளடங்கப்படுகின்றது என்பதும், அவர் தற்போது வாடகை வீட்டிலேயே குடியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராணுவ முகாமுக்காக காணி அளவீடு செய்வதை தடுக்கும் நோக்குடன் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் மாகாண சபை உறுப்பினர்களான சு.சுகிர்தன், பா.கஜதீபன், எம்.கே.சிவா ஜிலிங்கம் மற்றும் அ.பரஞ்சோதி ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனும் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இதேவேளை அச்சுவேலி தெற்கு பகுதியில் சுமார் 9குடும்பங்களுக்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலத்தில் படையினர் கடந்த 1995-ம் ஆண்டு தொடக்கம் நிலை கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் மக்கள் தம்முடைய நிலத்தை விடுவிக்க கோரிக்கை விடுத்து வரும் நிலையில்,

கடந்த வாரம் நிலம் சுவீகரிக்கப் போவதாக படையினர் பிரசுரங்களை அனுப்பியிருக்கின்றனர். மேலும் நேற்றைய தினம் 02.06.2014-ம் திகதி சுவீகரிக்கவுள்ள நிலத்தை அளப்பதற்கு நில அளவையாளர்கள் வந்திருந்த நிலையில் மக்கள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் வட மாகாண சபை அமைச்சர், பேரவை தலைவர் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் ஆகியோர் திரண்டு கடுமையான எதிர்ப்பினை தெரிவித்தனர்.

நுணாவில் பகுதியில் கடந்த 13வருடங்களாகவும் மக்கள் இடம்பெய ர்ந்து மாற்றிடங்களில் தங்கியிருக்கின்றனர். இந்நிலையில் படையினரின் தேவைகளுக்காக என பகிரங்கமாக குறிப்பிடப்பட்டு மக்களுடைய நிலத்தை

# ரூபாய் 4 ஆயிரம்...

இதேவேளை வேலணை மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்பவியல் பீடத்திற்கான நினைவுகல்லையும் ஆளுநர் திறந்து வைத்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களால் அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வுகளையடுத்து பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப்பாடசாலையின் இன்று (நேற்று) மிகவும் முக்கியமான இரண்டு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. மகிந்த சிந்தனையின் கீழ் நாடளாவிய ரீதியில் ஆயிரம் இடைநிலைப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய ரீதியில் அனைத்து மாகாணங்களிலும் இந்த தொழில்நுட்ப விஞ்ஞான கூடத் திறப்பு விழாவும், மகிந்ததோய தொழில்நுட்பவியல் பீடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளன. வடக்கு மாகாணத்தில் வேலணை மத்திய கல்லூரியில் இந்த நிகழ்வு இடம்பெறுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். காரணம் எனது தந்தையும் சகோதரர்களும் இக்கல்லூரியிலே கற்றுள்ளனர்.

கிராமப்புறபாடசாலைகளில் கல்வி கற்கும மாணவர்களுக்கும் தொழில்துறை சார்ந்த கல்வியை வழங்கும் நோக்குடனேயே இந்த விஞ்ஞான கூடங்களும், தொழில்நுட்ப பீடங்களுக்கான நோக்கமும். பாடசாலைக் கல்வியை முடித்தவுடன் வேலைவாய்ப்பை பெறக்கூடிய வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மகிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான கூடத்திற்கு 60 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ள அதேவேளை கணிதம், விஞ்ஞானம், தகவல்தொழிநுட்பவியல், மொழியியல் ஆய்வு கூடம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 16 மில்லியன் ரூபா செலவில் மகிந்ததோதய தொழில்நுட்ப பீடத்தினை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வடக்கில் கடந்த 4 ஆண்டுகளுக்குள் மத்திய அரசாங்கமானது கல்வி விருத்திக்கென சுமார் 4 ஆயிரம் மில்லியன் ரூபாயினை முதலீடு செய்துள்ளது. இந்த முதலீடுகளுக்கான வெளிப்பாடாக மாணவர்களின் பெறுபேறுகள் அமைய வேண்டும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் கடந்த 2013-ம் ஆண்டு 6-ம் இடத்திற்கு முன்னேறியுள்ள அதேவேளை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களிற்கு தெரிவு செய்யப்பட்டு அகில இலங்கை ரீதியில்


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532
valampurii@yahoo.com

CHARTERED @ K-AIMS
CAB I & CAB II
Classes are on progress
0773722104
147, 2/3, K.K.S. Road [Top of DFCC Bank]
Jaffna
(#-7553)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org